# விவேகவாணி

ஜீலை 2011 – கர ஆனி–ஆடி கலி 5112 ரூ.7/–

1





2



3



4






# விவேகவாணி

**விவேகானந்த கேந்திர மாத இதழ்**

**விவேகானந்தபுரம், கன்னியாகுமரி - 629 702**


## வணக்கம் வாருங்கள்!!

அன்புள்ள வாசக நேயர்களுக்கு, நமஸ்காரம்.

**விவேகவாணியின் ஜுலை - 2011** இதழ் அட்டைப்படத்தில் ஓம்காரத்தின் வண்ணப்படங்களைத் தாங்கி வருகிறது. வியாசபூர்ணிமா என்றும் குருபூர்ணிமா என்றும் அழைக்கப்படும் குருவழிபாட்டு தினம் இவ்வாண்டு ஜுலை 15-ம் தேதி வருகிறது. அனைத்து வேதங்களின் ஸாரம் காயத்ரீமந்திரம் என்றும் காயத்ரீயின் ஸாரம் வ்யாஹிருதிகள் (பூ: புவ: ஸுவ:) என்றும் வ்யஹிருதிகளின் மையக்கருத்து ஓம்காரம் என்றும் உபநிஷதங்கள் கூறும். சுவாமி விவேகானந்தர் அனைவரும் ஒன்றிணைய ஓம்காரம் உதவும் என்கிறார். **விவேகவாணியில்** தொடர்ந்து வெளிவரும் பிரணவம் எனும் ஓம்காரம் பகுதி வேதத்தின் உட்பொருள் என்று தலைப்பிடப்பட்டுள்ளது. 1993 ம் ஆண்டு கேந்திரம் வெளியிட்ட "ஓம் த எஸன்ஸ் ஆஃப்த வேதாஸ்" என்ற கேந்திரப் பத்திரிக்கையில் வெளியான வண்ணப்படங்கள் **விவேகவாணியில்** இவ்விதழின் அட்டையை அலங்கரிக்கின்றன.

குருபூர்ணிமா நன்னாளில் பகவான் வேத வியாசரின் ஆசிகள் நமக்குக் கிட்டுமாக. ஓம்காரத்தை ஓதி உணரவும் இறையருள் துணை நிற்குமாக. விஞ்ஞானியும் தொழில் நுணுக்க வல்லுனரும் பங்களூர் வேதப் பல்கலைக்கழகத் தலைவருமான டாக்டா எச். ஆா. நாகேந்திராஜி அவர்கள் ஓம்கார தியானம் பற்றி எழுதிய கட்டுரையும் மிகுந்த பயன் நல்குவது. வாசகர்கள் வாழ்வில் நலன்கள் பெருகப் பிரார்த்திக்கிறோம்.

**இப்படிக்கு,**
**இறைவன் பணியில்,**
**விவேகவாணி**

**ஜுலை - 2011**


**தொலைபேசி: (044) - 28440042/28442843**
**ஈமெயில்: vkpt@vkendra.org**

**தவம் 27 ஜுலை 2011 சேவை - 3**

**தனிப்பிரதி ரூ. 7/-, ஆண்டுச்சந்தா ரூ. 75/-, இரண்டாண்டுச் சந்தா ரூ. 140/-, மூன்றாண்டுச் சந்தா ரூ. 200/-, ஆயுட்சந்தா (10 ஆண்டுகள்) ரூ. 700/-, வெளிநாட்டு ஆண்டுச் சந்தா 20 டாலர்கள்.**

# மாதம் ஒரு மந்திரம்

**விவேகவாணியின்** ஜுலை 2011 இதழ் அட்டை குருபூர்ணிமையைக் குறிக்கும் வண்ணம் ஓங்காரத்தினை சித்தரிக்கும் ஓவியங்களைத் தாங்கி வருகிறது. மேலே இடது பக்கத்தில் பாரத மொழிகளில் ஓங்காரத்தின் வரிவடிவங்களும் மேலே வலதுபக்கம் இமயமலையில் உள்ள ஓம் பர்வதமும் கீழே உள்ள ஓவியங்கள் ஓம்காரத்தை கணபதியாகவும், ஆறு சக்கரங்களில் திகழும் குண்டலியாகவும் காட்டுகின்றன. கீழே இருக்கும் ஓவியங்கள் சோழ மண்டலம் கலைகிராம ஓவியர் திரு கே.எம். கோபாலனின் படைப்புக்கள் ஆகும். இரண்டாம் அட்டையில் ஓம்கார வடிவிலான ருத்திராட்சத்தின் படம் வெளியாகிறது.

திருப்புகழ் காட்டும் பிரணவப்பொருளை இம்மாத மந்திரம் ஆகும்.



மக்கட்குக் கூறரிதானது
கற்றெட்டத்தான் முடியாதது
மற்றொப்புக்கியாது மொவாதது - மனதாலே
மட்டிட்டுத் தேடவொணாதது
தத்வத்திற் கோவை படாதது
மத்தப்பொற்போது பகீரதி - மதி சூடும்
முக்கட் பொற்பாளருசாவிய
அர்த்த க்குப்போதகமானது
முத்திக்குக் காரணமானது - பெறலாகா
முட்டர்க்கெட்டா தென நான்மறை
யெட்டிற்கெட்டா தென வேவரு
முற்பட்டப்பாலையிலாவது - புரிவாயே

**பொருள்:** மக்களுக்கு இத்தன்மையது என்று எடுத்துச்சொல்ல இயலாதது. கற்று அறியலாம் என்றால் முடியாதது. வேறு ஒரு பொருளுடன் ஒப்புமைப்படுத்தலாம் என்றால் ஒப்பிட எப்பொருளும் பொருந்தாதது. உள்ளம் கொண்டு அளவிட்டுத்தேட இயலாதது. எவ்வகையான அறிவு ஆராய்ச்சிக்கும் ஒருவகையிலே அமையாதது, ஊமத்த மலரையும் பொன்போன்ற கொன்றை மலரையும் கங்கையையும் சந்திரனையும் சூடுகின்ற மூன்று கண்களையும் உடைய அழகான சிவபெருமான் கூறியருளுக என்று வினவிய பொருளுக்கு உபதேச வித்தாய் விளங்குவது. வீடுபேற்றுக்குக் காரணமாக விளங்குவது. பெறுவதற்கு முடியாதது. முட்டாளுக்கு எட்டாதது. நான்கு வேதங்கட்கும் எட்ட முடியவில்லை என்று விளக்கம் கூறாத வழியில் முற்பட்டும் முற்பட்ட நிலைக்கு அப்பால் உள்ளது. அத்தகைய பொருள் எதுவோ (அந்தப்பிரணவப் பொருளை முருகா) அதனை எனக்கு நீ உபதேசம் செய்தருள வேண்டும்.

## வேதத்தின் உட்பொருள்

# பிரணவம் எனும் ஓம்காரம் (245)

ஓம்காரம்

*மாண்டூக்கிய உபநிஷதத்தின் அடிப்படையில் சுவாமி பிரணவ சைதன்யபுரி ஹிந்தியில் எழுதி வாராணசி பரமார்த்த சாதக சங்கம் வெளியிட்டது*

*அத்தியாயம் - (2) ஓம்காரத்தின் மறைபொருள் - ஓம்காரமே அனைத்தும்*



அந்தக்கரணத்தில் நிலை பெற்றிருக்கும் உணர்வுமயமான மொழி சிந்தனை, எண்ண வடிவினது ஆகும். வாயில் இருந்து வெளிப்படும் மெய்யெழுத்து மயமான மொழியைப் பெற்றெடுப்பது இந்த உணர்வு மொழியே. நமக்கு உள்ளே இருக்கும் உணர்வுகளை வெளியே கொண்டு வந்து ஒளியூட்டும் போது அவை "சொல்லப்படுபவை, கூறப்படுபவை, கூற்று" எனப்படுகின்றன. உணர்வு மொழி அனைவருக்கும் பொதுவானது; மனிதர்கட்கு மட்டுமின்றி அனைத்துப்பிராணிகளிலும் ஒரே வடிவில் இருப்பது அது. மனத்தில் ஓடும் எண்ணங்களைப் படித்தறியவல்ல மைன்ட் ரீடர் பிறர் பேசும் மொழி தெரியாவிட்டாலும் அவருடைய எண்ணங்களைப் புரிந்து கொண்டு விடுகிறார். சிந்தனை மயமான மொழியில் வேறுபாடுகள் கிடையாது என்பது இதில் இருந்து நிரூபணம் ஆகிறது.

வைக்கரீவாணி இடம், ஜாதி, காலம் ஆகிய வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டதாகும். இவ்வேறுபாடுகள் இயற்கைச் சூழல், வாக்கு எனும் கருவியின் உருவம், ஜாதிப்பிறப்புக்கள் ஆகிய காரணங்களால் ஏற்படுகின்றது. ஆனால் எந்த ஒரு நபரும் எந்த ஒரு மொழியிலும் எந்த ஒரு பொருளின் பெயரையும் சிறப்புப் பெயரையும் உச்சரிக்கும் போது, அவருடைய அந்தக்கரண சிந்தனையின் தூலமான வெளிப்பாடுதான் நிகழ்கிறது. அந்தச் சிந்தனையின் வடிவம் அந்தந்த நபர்களின் மொழி வேற்றுமைகளினால் மாறுபட்டு இருக்காது. வேறுபாடுகள் அற்ற உணர்வுகளின் வெளிப்பாடு வெவ்வேறு மொழிகளில் மூல ஆதாரம். ஆகவே தான் நாம் செவிக்குத் துலங்கும் உலக மொழிக்கு வேறான ஒரு உணர்வு மயமான மொழி உண்டு என்கிறோம்.

ஒற்றுமை வேற்றுமை பற்றிய ஞானத்தினால் இன்றியமையாத இன்முகப்பூரிப்பே வாசகம் (வாயால் கூறப்படுவதாக) ஆகிறது. தூய ஓசை அவ்வாறு ஆவதில்லை. வாயால் கூறப்படும் ஓசை (வாசகம்) தான் கூறும் அர்த்தத்தை, பொருளை எடுத்து விளக்குகின்றது. அர்த்தம், பொருள் என்பது ஒளியூட்டுவதாகிய காரியம். வாசகம் காரணம் ஆகும். ஆகவே வாசகம் இருந்தால் அர்த்தம் ஒளிபெறும்.



இல்லாவிட்டால் பெறாது. ஒரே பொருளுக்கு, வெவ்வேறு மொழிகளில் வெவ்வேறு சொற்கள் உள்ளன. ஒரே மொழியில் கூட, பல சொற்கள் இருப்பதுண்டு. ஸம்ஸ்க்ருதத்தில் கடம், கலசம், கும்பம் முதலிய பல சொற்கள் பானையைக் குறிப்பவை. அப்படி ஒருவர் கடம் என்ற சொல்லை வாசகமாக ஏற்பார் என்றால் கலசம் முதலிய சொற்களை உச்சரிக்கையில் கடம் எனும் சொல் இல்லாமல், பொருளே விளங்காமல் போய்விட வேண்டுமே! ஒவ்வொரு சொல்லையும் வாசகமாக ஏற்கும் பட்சத்தில் "சல்லடை" நியாயத்தின்படி, உண்மையில் இருந்து நழுவுதல் என்ற தோஷம் ஏற்படும். கௌரவ தோஷமும் ஏற்படும். இதனைத் தவிர மௌனக் குறிப்பினாலும் பொருள் உணரப்படுவது காணப்பட்டுள்ளது. ஊமை, செவிடர்களும் கூடும் இடத்திலும் உணர்வுப்பரிமாற்றம், உடல்சங்கேத சைகை மொழி மூலம் நடக்கிறது. ஆகவே, பொருளை விளக்குமுன் விதிப்படியான நன்கு விளங்கும் அந்தக்கரணப் பூரிப்பினையே வாசகம் என்று கூறியாக வேண்டும். ஏனென்றால் அது இருந்தால் மட்டுமே, பேச்சாளன் ஓசையை எழுப்புதல் சொல்லை உச்சரித்தல் ஆகிய காரியங்களைச் செய்ய முடியும். கேட்பவனின் இதயத்தின் பொருள் விளங்கும். அகப்பூரிப்பு இல்லாவிட்டால் பேசுபவன் கேட்பவன் யாருக்குமே பொருள் விளங்காது.

இன்னொரு உதாரணத்தையும் எடுத்துக் கொள்வோம். ஏதாவது ஒரு விஷயத்தை வெளிப்படுத்துவதற்கென நாம் சில சொற்களையே உண்டாக்கிக் கொள்வது என்பதும் சில சமயங்களில் நடக்கிறது. சொற்பொழிவாகவோ, கட்டுரையாகவோ அது முன்னேறுகிறது. பல சமயங்களில் என்ன நடக்கிறது? நாம் சொல்ல வரும் பொருளைத் தெள்ளத் தெளிவாக பூரணவடிவில் சொல்ல நம்மால் முடியவில்லை என்ற உணர்வு ஏற்படுகிறது. மகத்தான கவிகட்கும் உள்ளதை உள்ள படி சொல்ல இயலாத சில வேதனை ஏற்படுகிறது. இது பிறருக்கும் தெரிகிறது. சாதாரண மக்களிடம், இதயத்தில் இருக்கும் உணர்வுக்கும் தொண்டையில் இருந்து வெளிவரும் சொற்றொடருக்கும் ஒற்றுமையின்மை இருக்கவே இருக்கிறது. இதைச் சொல்லவும் வேண்டுமா? நம்முடைய பேச்சு கூற்றிலேயே இத்தனை தாழ்வு குறைவு எப்படி ஏற்பட்டு விடுகிறது? சொற்களிலோ, அவற்றை வரிசைப்படுத்தி அமைப்பதிலோ நாம் மாற்றங்களைச் செய்து விடுகின்றோம்! ஒரு சொல்லை விலக்கி விட்டு அதனிடத்தில் வேறொரு சொல்லைப் பயன்படுத்துகிறறோம்! அதிலும் திருப்தி வரவில்லை என்று மூன்றாவது ஒரு

சொல்லைப் பயன்படுத்துகிறோம். தேடுகிறோம். தேடிக்கொண்டே இருக்கிறோம். ஏதாவது ஒரு உதாரணச் சொல்லையோ முன் மாதிரியையோ ஆதாரமாகக் கொண்டு நாம் இவ்வாறு செய்ய முடியுமா? நம் இதயத்தில் ஒரு லட்சிய முன்னுதாரணச் சொல்லின் அனுபவம் கிட்டவில்லை எனில் "இச்சொல் தவறானது. இச்சொல் இந்த உணர்ச்சியை உண்மையான பொருளில் எடுத்துக் கூறவில்லை. இச்சொல் எப்போதும் பயனுடையது" இப்படி நாம் புரிந்து கொள்வது எவ்வாறு? நம்முடைய புத்தியானது அனுபவத்தை வகுத்தும் தொகுத்தும் பார்த்து இதயத்தின் ஆழத்தில் மூழ்கி எந்த லட்சியத்தைத் தேடுகின்றதோ அந்த லட்சியம் தான் மத்யமா வாக்கு ஆகும்! இதயத்தின் அந்தரங்கத்தில் விளங்கும் அந்த வாணி தான் வெளிமனத்தின் போக்குகள் (செல் நெறிகள்) எண்ணங்கள் மற்றும் வைக்கரீவாணி மூலம் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது.

வாக்ரூபதா சேத் உத்க்ராமேத் அவபோதஸ்ய சாச்வதீ |
நப்ரகாச: ப்ரகாசேத ஸாஹி ப்ரத்யவமர்சினீ || (வாக்யபதீயம் 1/124)



ஞானம் எப்போதும் வாக்குவடிவுடன் நெருங்கிய தொடர்பு கொண்டே இருக்கிறது. இல்லையென்றால் எந்த அனுபவத்தையும் சொற்களால் எடுத்துக்கூறுதல் இயலாது. அதனால் அந்த அனுபவம் வெளிச் சொல்லப்படாமல் ஒளி இழந்து போய்விடும். சொல்ல வந்தது என்னவென்றால், சுய அனுபவத்தை சொல்லோசைகள் மூலம் பிறரருகில் கெண்டு செல்ல முடிகிறது. அதனால் ஞானமானது இயல்பிலேயே சொல்வடிவினதாக இல்லை எனில் சொல்லற்ற ஞானம் சொல்லின் பிறப்பிடமாக இருக்க முடியாது. ஸத்காரிய வாதத்தின்படி காரணத்தின் உள்ளே பொதிந்திருக்கும், வெளியில் தோன்றாத காரியத்தைத்தான் வெளிப்படும்படி செய்ய முடியும். உள்ளே பொதிந்திராத காரியத்தை வெளிப்படுத்த முடியாது. விதையில் இருந்து மரம் வெளி வருகின்றது என்றால் விதையினுள் மரமானது சூக்கும வடிவில் இருக்கவே இருக்கிறது என்று பொருள். அப்போது தான் ஆலம் விதையில் இருந்து ஆலமரம், மாங்கொட்டையில் இருந்து மாமரம் இவ்வித ஒழுங்கு காணப்படுகிறது. வாக்கின் செயல்பாடுகள் முழுவதற்கும் விதை "ஞானம்" தான். அதனால் ஞானத்தின் உள்ளே சொல்லோசை இல்லாவிட்டால் ஞானத்தில் இருந்து சொல் ஓசை எப்படி வெளி வர முடியும்? (முடியாது). ஆகவே ஞானமானது சூக்குமமான ஓசையுடன் எப்போதும் இணைந்திருக்கிறது.

ஞானத்தில் இயல்பாகவே வெளிச்செல்லும் போக்கு இருக்கிறது. அது அறிபவனின் அருகில் பூரிக்கும் உள் ஓசையின் வடிவில் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது. பிறரருகே தூய சொல்லோசை வடிவில் தன்னை வெளிப்படுத்திக்

கொள்கிறது. ஏதாவது சிறப்பான சம்பவம் நிகழ்ந்து விட்டால் அந்த அனுபவத்தை நாம் பிறரிடம் கூறத்துடிக்கிறோம். சொல்லி முடிக்கிறவரை நிம்மதி இன்றி இருக்கிறோம். அந்த அனுபவத்தை யாரிடமாவது வெளிப்படுத்தும் சமயத்தில் ஒரு உல்லாசத்தை மகிழ்ச்சியை அனுபவிக்கிறோம். இதைத் தொடர்ந்து உடனேயே அந்த அனுபவத்தின் வேகம் சாந்தம் அடைந்து விடுகிறது. சில மிகச் சிறப்பான அனுபவங்களோ, பலபேரிடம் பல தடவை கூறிய பிறகும் அது மெள்ள, மெள்ளத்தான் சாந்தம் அடைந்து விடுகிறது. ஆகவே ஞானத்திற்கு, (புறப்) பொருள் வடிவத்துடனே கூட, வெளிப்படும் திறமையும் எப்போதுமே இருக்கிறது. இவ்வாறு ஒத்துக்கொள்ள வேண்டி இருக்கிறது. அதில் இருந்து தான் வெளிச்செல்வதன் வெளிப்பாட்டின் முழு நடவடிக்கையும் நடைபெறுகிறது. ஞானத்தினுள் விளங்கும் இந்த இயற்கையான சக்தியைத்தான் வாக்கு என்கிறோம். ஞானத்தின் அரை உருவாகத்திகழும் இந்த வாணி தான் தூலத்தின் தாய்!



தத்துவ அறிஞர்கள் இதனை "ஸ்போடம்" என்ற பெயரால் அழைக்கின்றனர். **"ஸ்புட்யதே வ்யஜ்யதே வர்ணை: இதி ஸ்போட:"** வர்ண எழுத்துக்களின் மூலம் எதன் வெளிப்பாடு நிகழ்கின்றதோ, அதற்கு **"ஸ்போட்டா"** என்று பெயர். ஸ்புடித்துப் போவதால் **"ஸ்போட்டா"** வாக்கு எனும் புலனினால் உச்சரிக்கப்படுவதும் ஓசையே தெளிவுபடச்செய்கிறது. அதில் இருந்து தெளிவாவது **"ஸ்போட்டா".** எந்த விஷயத்தை நாம் கூற விரும்புகிறோமோ, எதைக் கூற நாம் முயற்சி செய்கிறோமோ அது இதயத்தின் மொழி ஆகும். அதுவே மத்யமா ஆகும். அதுவே ஸ்போட். எந்தச் சொற்களைக் கூற விரும்புகிறோமோ, சொல்ல விரும்பும் செயல் மூலம் எச்சொற்களை உச்சரிக்கிறோமோ, அது வாயின் மொழி. அதுவே வைக்கரீ! அதுவே வெளிப்படும் சொல் எழுத்து ஓசை! இதய மொழி உணர்வு மயமானது, வைக்கரீயே ஓசை எழுத்து மயமானது! உணர்ச்சிகள் தான் பூரித்து வெளி வந்து வைக்கரீ உருவம் எடுத்துக் கொள்கின்றன.

வெளி மனம் பிரஞ்ஞை மனம் உணர்வுகட்கு ஏற்பவே நடவடிக்கைகளை எடுக்கின்றது. உணர்ச்சிகட்கு ஏற்ப மனத்தில் எண்ணங்கள் மற்றும் ஓசைகள் எழுகின்றன. அவற்றிற்கு ஏற்ப வாக்கின் செயல்கள் உடலின் செயல்பாடுகள் நிறைவேறுகின்றன. ஒருவரின் வாழ்க்கை முழுவதும் அவருடைய இதயத்தில் ஏற்படும் உணர்வுகளின் வெளிப்பாடும், வெளிப்படுத்தும் முயற்சிகளே தானே! ஒரு மனிதரின் உலகம் (ஜகத்) அவராலேயே படைக்கப்பட்டது. அது அவருடைய உணர்வுகளில் இருந்து, மனப்பதிவுகளில் இருந்து படைத்து உருவாக்கப்பட்டது. இப்படைப்புலகின் எல்லாப் பொருள்களும் உணர்வுமயமான ஓசைச் சொல்லில் இருந்து பிறப்பவையே. அதனுடன் இணைந்தவையே.

# ஓம்காரத்யானம்
# (தாரணையில் இருந்து தியானத்திற்கு)

டாக்டர் எச்.ஆர். நாகேந்திரா

தியானம் என்பதை மெடிட்டேஷன் என்றும் கூறுகிறோம். அது முயற்சியற்ற தாரணைதான். வேறொன்றும் இல்லை. நம்மால் நீண்ட நேரம் தாரணை செய்ய முடியாது. ஏனெனில் அது சிரமமானது, களைப்பூட்டுவது. பத்து விநாடி கூட அதிகத் தீவிரத் தன்மையுடன் அதனை நாம் பயின்றால் தாரணை நம்மை முற்றிலுமாகக் களைப்படையச் செய்கிறது. அதற்கு மருந்து என்ன? முயற்சி இன்றி இருத்தலே, ஓய்வு உணர்வு பெறுதலே. அப்போது நாம் தியானத்தில் நுழைகிறோம்.

**தத்ர ப்ரத்யயைக தாநதா த்யானம் (பதஞ்சலி யோகசூத்திரம்(3/2)**

ஒரு எண்ண நீரோட்டத்தில் நிற்பது தியானம். ஒரு எண்ணத்தின் மீது சிரமமோ முயற்சியோ இன்றி நிலை நிற்பது – தைல தாராவத் எண்ணெய் ஒழுக்கு ஒரு சாய்தளத்தில் தாராளமாக ஓடுவது போன்றது இது. தியானத்தின் ஐந்து அம்சங்களாவன (1) ஒற்றை எண்ணம் (2) சிரமமோ முயற்சியோ இன்றி ஓய்வுடன் இருத்தல் (3) வேகம் குறைதல் (4) விழிப்புணர்வும் பிரஜ்ஜை உணர்வும் (5) விரிவாகி இலேசாக இருப்பதாக உணர்தல்.

எந்த ஒரு நெறிமுறையிலும் இவ்வைந்து அம்சங்களும் இருந்தால் அதனை நாம் தியானம் என்று கூறலாம். தியானம் என்பது, சிரமமான முறையில் மனத்தைக் குவித்து கூர்மையடையச் செய்வது இல்லை! இதில் கட்டாயத் திணிப்பு, வலிந்து முயற்சி செய்தல் கிடையாது; எண்ணங்களை அடிமனத்தில் ஒளித்துத் திணித்து வைத்தல் கிடையாது. இது தான் தந்திரம். இது விரிவாகும் வழிமுறை, மனம் குவிவதைக் கலைக்கும் வழிமுறை; சிலர் அதனை மனம் குவிவதற்கு எதிரான வழிமுறை என்று கூறுவதும் உண்டு.

இவ்வாறாக தியானம் என்பது, ஒரே ஒரு எண்ணத்தின் மீது, நிலையாக நிற்க, சிரமம் இன்றி நிற்க உதவும் நெறிமுறையாகும். நம் எண்ணங்களைக் கட்டுப்படுத்த நாம் அதிகம் போராடும் போது, ஒரே எண்ணத்தில் நிலை நிற்கப் போராடும் போது, நாம் தியானத்தில் இருந்து அதிக தூரம் விலகிச் சென்று விடுகின்றோம். ஓய்வுணர்வு பெறுதல் வேகத்தைக் குறைத்தல், ஒரே எண்ணத்தில் சுலபமாக நீடித்து நிற்பதில் இன்புறுதல், மகிழ்ச்சி உணர்வு பெறுதல், இலேசாக இருப்பதாக உணர்தல் ஆகியவே அதன் அடையாளங்கள் ஆகும். இதனை முற்றிலுமாக விழிப்புணர்வுடன் செய்ய வேண்டும். சாதகர் தூக்கத்தில் அமிழ்ந்து விடக்கூடாது.

**ஓம் தியானத்தின் பயிற்சி வழி:**

விருப்பமான நிலையில் வசதியாக உட்கார்ந்து கொள்ளுங்கள். பத்மாசனத்தில் அமரும் பழக்கமுண்டாயின் அவ்வாறே செய்க. முடியாவிட்டால் சிரமப்படாதீர்கள். தேவைப்பட்டால் ஒரு வசதியான நாற்காலியில் கூட உட்காரலாம்

நீங்கள் சௌகரியமாக இருக்கும் நேரத்தில் தியானம் பழகுங்கள். அந்த நேரத்திலோ அதற்கடுத்தோ மும்முரமான பணித்திட்டங்கள் இருக்கும் நேரம் வேண்டாம். விடியற்காலமும் மாலையும் சிறந்தவை உகந்தவை. ஆகாரம் இலேசாக இருக்கட்டும். வயிறு பாரமின்றி இருக்கட்டும்.

**முதல் கட்டம்:**

கண்களை மூடிக் கொள்ளுங்கள். ஓம் மந்திரத்தை ஓதத்துவங்குங்கள். மனம் இடையீடு இன்றி ஓம் இனை ஓத வேண்டும். மனம் கலைந்தோடினால் கொஞ்சம் அதிக வேகமாகவும் அதிகம் இரைந்தும் ஓதுக. மனம் அலைய வாய்ப்புத் தராதீர்கள். கொஞ்ச நேரத்திற்குப் பிறகு ஓதும் வேகம் குறைந்து விடும். இன்னும் வேகத்தைக் குறையுங்கள். மனம் குதித்து அலைந்தால் ஜபம் செய்யும், ஓதும் வேகத்தை அதிகரித்துக் கொள்ளுங்கள். இப்படி வேகத்தைக் குறைத்தும் கூட்டியும் மனம் அலையாமல் நீரோட்டம் போல் மந்திரத்தைப் பற்றி நிற்கப்பழகுக.

**இரண்டாம் கட்டம்:**

ஓதுவதை மென்மையாக்குக, மிருதுவாக்குக. மேலும் மேலும் முயற்சியின்றிச் செய்யப்பழகுக. தியான நெறியில் முன்னேறும் போது, ஜபத்தின் இரண்டாம் கட்டத்தை அடைவீர்கள். அப்போது, உடலின் ஏதாவது ஒரு பகுதியின் மந்திரத்தின் அதிர்வொலியை உணரத் தொடங்குவீர்கள். பிறகு உடல் முழுவதும் இதன் அதிர்வு பரவும்.


பதஞ்சலி கூறுகிறார்: **“தஜ்ஜப: ததர்த்த பாவனம்”** ஜபம் வளர்ந்து அடுத்த கட்டத்தை அடையும் போது ஜபத்தின் அர்த்தத்தை உணரத் தொடங்குவீர்கள். இந்தக் கட்டத்தில் தியானத்தில் நீங்கள் சுகம் அனுபவிக்கத் தொடங்குவீர்கள். இதனால் உங்கள் உடலிலும் மனத்திலும் ஆழமான மாற்றங்கள் வந்து சேரும்.

ஹனுமான் பக்தர்களுள் பெரிய ஒருவராவார். அவர் ராம பக்திக்கு பெயர் போனவர். அவர் ராமநாமத்தை தன் ஒவ்வொரு மயிர்க்காலிலும் திசுவிலும் உணர்ந்தார். மேற்சொன்ன அதிர்வொலி (ரெஸொனன்ஸ்) எதிரொலி இத்திசையில் முதல் கட்டம் ஆகும்.

உடலின் இயல்பான அதிர்வொலி வேகத்துடன், ஓதப்படும் மந்திரத்தின் அதிர்வொலி வேகம் இணையும் போது, ரீங்கார அதிர்வொலி (ரெஸொனன்ஸ்) ஏற்படும் என்பதை இயற்பியல் மாணவர்கள் அறிவார்கள். இதனால் உடல்

முழுவதும் அழுத்தித் தேய்த்து விட்டது போல் புத்துணர்வு, ஓய்வுணர்வு கிட்டும். தம்புராவிலோ, வீணையிலோ நுணுக்கமாக, சரியாக சுருதி சேர்த்தால், அதன் கம்பியைச் சுண்டும்போது அக்கருவியின் உடல் முழுவதும் அதிரும். கருவியைத் தொட்டே இதனை நீங்கள் உணர முடியும். நம் வீணை நம் உடல் தான். நம்முன் அதிர்வொலிகள் இதனில் முழுமையாகப் பரவும் வண்ணம் சுருதி கூட்ட வேண்டும். பயிற்சியின் ஆரம்ப கட்டத்தில் உடல் முழுவதிலும் அதிர்வுகளை உணருவது சுலபம் ஆகும். ஓம் என்பதை உரக்க ஒலிக்கும் போதும், அதிர்வொலி நன்கு உணரப்படும். ஆகவே தான் பல சாதகர்கள் முதலில் வாசிக ஜபம் பிறகு மானசீக ஜபம் பயில்கின்றார்கள்.

மந்திரத்தின் அதிர்வுகள் உடல் முழுவதும் உணரப்பட்டால் நீங்கள் தியானத்தில் நல்லதொரு நிலையை அடைந்து விட்டீர்கள் என்று பொருள். மனத்தில் ஒரே ஒரு எண்ணத்தை நிலை நிறுத்தும் போராட்டம், மனம் அலைவதையே அதிகரிக்கும். இது பூமராங்விளைவு (திருப்பி அடிக்கும் விளைவு) எனப்படும். வேகத்தைக் குறையுங்கள்; கவனம் திசை திரும்புவது ஒழியட்டும்.




(கட்டுரை தொடரும்)

## காஷ்மீர் நாகதண்டியில் நல்லதொரு விழா

காஷ்மீரில் நாகதண்டியில் சுவாமி விவேகானந்தர் விஜயம் செய்த அச்சாபல் அருகே கேந்திரத்தின் அழகிய ஆசிரமம் அமைந்துள்ளது. அதில் ஸ்ரீராமநவமி மிகுந்த உற்சாகத்துடன் ஆன்மீக உணர்வுடன் கொண்டாடப்பட்டது. பஜனை கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பொதுமக்கள் திரளாக வந்திருந்தனர்.

மத்திய அரசின் மரபு சாரா எரிசக்தித் துறை அமைச்சர் டாக்டர் ஃபரூக் அப்துல்லா முக்கிய விருந்தினராகக் கலந்து கொண்டார்.

மாபெரும் மருத்துவ முகாமிற்கான ஏற்படுகளைக் கேந்திரம் செய்து வருகிறது. மொபைல் டிராலி, ரிக்ஷா ஆகியவற்றை மாற்றுத் திறனாளிகட்கு வழங்க ஏற்பாடுகள் செய்து வருகிறோம். மருந்துகளும் வழங்கப்படும்.

முகாம் ஏற்பாடும் தகவலும்: திரு விவேகானந்தராய்

காஷ்மீர்

## கன்னியாகுமரியில் கண் முகாம்

4-5-2011 அன்று விவேகானந்தபுரத்தில் நடந்த 122-வது கண் முகாமுக்கு நாகர்கோவில் யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனியினர் நிதி உதவி அளித்தனர். அந்நிறுவனத்தின் சார்பாக சீனியர் டிவிஷனல் மேனேஜர் திரு முத்து சுவாமியும் கன்னியாகுமர் மைக்ரோ பிராஞ்ச் பொறுப்பாளர் திரு என். சிவதாணுவும் முகாமிற்கு வந்து நடத்திக் கொடுத்தனர்.

நெல்லை அரவிந்த் கண் மருத்துவமனையின் கண் மருத்துவர்கள் டாக்டர் தீப்தி பிம்பிள், டாக்டர் சுருதி ஜெயின், திரு எஸ். மகேஷ் ஒருங்கிணைப்பாளர், 13 பிற உதவியாளர்கள் முகாமை நடத்தி 172 புறநோயாளிகளை சோதித்து 67 பேரை கண் அறுவைச் சிகிச்சைக்கு திருநெல்வேலி அழைத்துச் சென்றனர். 43 பேருக்கு ரிஃப்ராக்ஷன் சோதனை செய்யப்பட்டது.

திரு வே. அருமைத்தங்கம், திரு சுகுமாரன், திரு முத்துராமலிங்கம், துணை மக்கள் தொடர்பு அதிகாரி திரு கே.பி. ரகுநாதன் நாயர் ஆகியோர் முகாமினை ஒருங்கிணைத்தனர்.

நாகர்கோவில் மருத்துவ சேவை இணை இயக்குநர், மாவட்ட பார்வை இழப்புக் கட்டுப்பாட்டு சங்கம் ஆகிய அமைப்புக்கட்கும் தகவல் தரப்பட்டது.

# நசிகேத மன்றம்

ஆர்.கே. லிங்கேசன், மேலகிருஷ்ணன்புதூர், குமரி மாவட்டம்

**1707) சிவபெருமான் எப்போதும் தியானத்தில் இருப்பது ஏன்?**



தியானமும் தவமுமே இறைவடிவங்கள் ஆகும். 'தபோபிரம்மேதி' தவமே பரம்பொருள் என்கிறது தைத்திரீய உபநிஷதம். விஷ்ணுவும் நரநாராயண வடிவில் இமயமலையில் தவம் புரிகிறார். பராசக்தி கொல்லூரிலும், கன்னியாகுமரியிலும் காஞ்சியிலும் தவம் புரிகின்றார். முருகப்பிரான் பழனியில் தவம் இயற்றுகிறார். தவம் என்பது உலக மாசுகள் தன்னை அண்டாதவண்ணம் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் வழி ஆகும்.

நீங்கள் எதற்குத் தவம் தியானம் புரிகிறீர்கள் என்று சீடர் கிரீஷ் சந்திரகோஷ் ஸ்ரீராமகிருஷ்ணரைக் கேட்டதற்கு அவர் "சிவனும் பார்வதியும் என்றென்றும் ஒன்றாகவே இணைந்திருக்கிறார்கள். இருப்பினும் பார்வதி ஏன் அவ்வளவு தவம் செய்கிறார்? பிறருக்கு உதாரணமாக விளங்கவே! நான் இவ்வளவு தவம் புரிந்தால்தான் பிறர் இதில் பதினாறில் ஒரு பங்காவது தவம் புரிவார்கள்" என்று பதில் கூறினார்.

சாஹில் குமார், ஜார்க்கண்ட்

**1708) நான் திட்டவட்டமான பணியை உலகில் ஆற்ற விரும்புகிறேன் வழி என்ன?**

உங்களுக்கு அருகில் இருப்பவர்கட்கு உதவுவதே வழி. உங்களால் முடிந்த காரியங்களைச் செய்து, படிப்படியாக பணியை விரிவாக்கிக் கொள்ள வேண்டும். சேவைகளை வலிந்து மேற்கொள்ளும் பணிகள் சுயவளர்ச்சிக்கு உதவாது. உலகளாவிய தொண்டுப்பணி உள்ளூரில் இருந்து துவங்குகிறது என்பார் காந்திஜி. சுயதருமம் என்பது இயல்பான பணி. இதைத் துறந்தவருக்கு வாழ்க்கையின் வளர்ச்சிப்பாதை அடைபட்டுப் போய்விடுகிறது.

கோவை ஸ்ரீராமகிருஷ்ணமிஷன் இளைஞர் முகாம் உறுப்பினர்

**1709) ஆளுமை வளர்ச்சியில் எது முக்கியம்? மொழியா, பிறரைக்கட்டுப்படுத்தும் சக்தியா, ஆக்கப்பூர்வமான எண்ணங்களா?**

தன் ஆளுமையை வளர்த்துக் கொள்ள, பிறரைக் கட்டுப்படுத்த வேண்டிய தேவையே இல்லை. அதிகார வேட்டை மனிதனின் உண்மையான ஆளுமை வளர்ச்சியைக் குறைத்து வருகிறது. கேந்திரத் துணைத்தலைவராக இருந்த பேராசிரியா வாஸ்வானி, நாட் த லவ் ஆஃப் பவர், பட் த பவர் ஆஃப் லவ் என்பார். அதிகாரத்தில் ஆசை கிடையாது, அன்பினால் கிட்டும் அதிகாரம் என்பார் அவர். உள்ளத்தில் தோன்றும் மனப்பூர்வமான நல்லெண்ணங்கட்கு, ஆளுமை வளர்ச்சியில் மிகுந்த முக்கியத்துவம் உண்டு என்று சுவாமி விவேகானந்தர் கூறுவார். உள்ளத்தின் ஆழ்ந்த உணர்ச்சியும் நேர்மையும் இருந்தால் அவ்வுணர்ச்சி தன்னை வெளிப்படுத்திக் கொள்வதற்கான சொற்களை, வாக்கியங்களைத் தானே உண்டு பண்ணிக் கொள்ளும். ஸ்ரீராமகிருஷ்ணர், ஸ்ரீரமண மகரிஷி ஆகியோரின் கருத்துக்கள் நம் உள்ளத்தைத் தொடுவது, அவற்றில் உள்ள அலங்காரச் சொற்களினால் அல்ல. கருத்துக்களின் நம்பகத் தன்மையால், சத்தியத்தால் , அன்பால். ஆளுமை வளர்ச்சியின் ஆதாரம் மனப்பூர்வமான அன்புணர்வே.

சுவாமி பக்தன், கோயம்புத்தூர்

**1710) படித்த திறமையுள்ள இளைஞர்கட்கு வேலை கிடைக்காததற்கு காரணம் என்ன?**

தங்கள் திறமையை, உற்பத்தித் திறனாக மாற்றி, சந்தையில் விற்றுப் பணமாக மாற்றும் வக்கு இல்லாத இளைஞர்கள் இந்தப் பொறுப்பையெல்லாம் ஏதாவது ஒரு கம்பெனி முதலாளி ஏற்றுக் கெண்டு மாதாமாதம் எனக்குச் சம்பளம் மட்டும் கொடுத்து விட்டால் போதும் என்று நினைக்கின்றனர். திறமை என்பது ஒட்டு மொத்த சமுதாயத் தேவையில் ஒரு சிறு பங்குதான். முதலீடு, சமுதாயத்தின் தேவையைப் பூர்த்தி செய்யும். உற்பத்தி, விற்பனை எல்லாம் சேர்ந்து முதலீடு, சமுதாயத்தின் தேவையைப் பூர்த்தி செய்யவும், பொருள்களின் உற்பத்தி விற்பனை, எல்லாம் சேர்த்து தான் செல்வமாகிறது. இளைஞர்கள், ஆபத்துக்களை எதிர்கொள்ளும் (ரிஸ்க் எடுக்கும்) திறமை இன்றி, லாபநஷ்டப் பொறுப்பைப் பிறர் ஏற்க வேண்டும் என்று எண்ணுகிற போது, அவர்களைப் பிறர் சுரண்டுவதும் அதிகம் ஆகிறது. இளைஞர்கட்கு நிறையச் சம்பளம் கொடுக்கும் பன்னாட்டு நிறுவனங்கள், தகவல் தொழில் நுட்ப நிறுவனங்கள் இவற்றில் தான் இளைஞர்கள் திறமையை அதிகம் சுரண்டி, அவர்கள் கம்பெனிக்கு ஆற்றும் சேவைக்கேற்ப அவர்கட்குச் சம்பளம் தராமல் போவது அதிகம் என்று பல இளைஞர்கள் குறைப்பட்டுக் கொள்கிறார்கள். படைப்பாற்றல், உற்பத்தி, திறமையை வெளிப்படுத்துதல் இவை அனைத்திலும் மறைந்திருக்கும் ரிஸ்கை (ஆபத்துக்களை) எதிர் கொள்ள இளைஞர்கள் முன்வந்து, தொழில் முனைவோர்களாக மாறுவதே பிரச்சினைக்குத் தீர்வு.

எம். மஞ்சுளா மீனாக்ஷி, மதுரை

**1711) இளைஞர் மீது இன்டர்நெட்டினால் என்ன விளைவு ஏற்படுகிறது?**

எந்த ஒரு கருவியும் விஞ்ஞானமும், தொழில் நுணுக்கமும் அதைப்பயன்படுத்துபவரின் ஒழுக்கம், நேர்மை, சுயக்கட்டுப்பாடு இவற்றைப் பொறுத்தே, அதைப் பயன்படுத்துபவருக்கு நலம் தரும் அல்லது தீமை பயக்கும். சினிமாவைவிட சென்சாருக்கு (சமுதாயக்கட்டுப்பாட்டு) இன்டர்நெட்டில் வாய்ப்புக் குறைவு என்றேபடுகிறது. இதனால் தனிமனிதர், குடும்பம் இவற்றின் பொறுப்பு அதிகரிக்கின்றது. பரவலான சுயக்கட்டுப்பாடு இல்லாதவர்கள் இடையே இத்தகைய தகவல்பரிமாற்ற வசதிகள் பரவும் போது, அறியாக் குழந்தை கையில் நெருப்புப் பந்தத்தைக் கொடுத்தாற் போல சுய நஷ்டத்துக்கான ஆபத்துக்கள் தான் அதிகரிக்கின்றன.



கே. தீபா, சேலம்

**1712) நாம் செய்யும் செயல்கள் அனைத்திற்கும் இறைவனின் விருப்பமே காரணம் என்றால் நாம் செய்யும் தவறுகட்கு அவரைக் காரணமாக்க முடியுமா?**

இறைவன் பல தளங்களில் வெவ்றேு மாதிரியாகப் பணி ஆற்றுகின்றார். எல்லாச் சக்தியும் அவருடையதே என்பது கடைசி நிலை. அவருடைய சக்தியில் ஒரு பகுதியை நமக்குக் கொடுத்து அதனை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள உதவும் அறநூல்களையும் இறைவன் நமக்குத் தந்திருக்கிறார். ஆகவே அந்த சக்தியை நல்ல முறையில் பயன்படுத்தினால் இன்பமும், அதைத் தவறாகப் பயன்படுத்தினால் துன்பமும் நமக்கு உண்டாகின்றன. இந்த இன்பதுன்பம், நேர்மை, தவறு இவற்றுக்கு நாமே பொறுப்பு. இறைவன் பொறுப்பு ஆக மாட்டார். அவர் நமக்குக் கொடுத்திருக்கும் சுதந்திரத்தை, சக்தியை, நன்கு பயன்படுத்திக் கொள்ள உதவும் அறநூல்கள் நமக்கு வழிகாட்டிடும். அப்படி சுதந்திரம் இல்லாத அல்லது குறைந்த அளவே சுதந்திரம் உடைய, மிருகங்கள், தாவரங்கள் இவற்றிற்கு தன்னை முயற்சி மூலம் உயர்த்திக் கொள்ளும் வாய்ப்பு இல்லை. மனிதனுக்கே அவ்வாய்ப்பு உண்டு.

ஸி. முத்துசாமி, விவேகானந்த கேந்திரம், பாளையங்கோட்டை

**1713) சமயகுரவர், சந்தான குரவர் வேறுபாடு என்ன?**

பெரும்பாலும் சைவத்தில் தான் இச்சொற்கள் பயன்படுகின்றன. சைவத்திற்கு உதவும் மூல தமிழ்ப்பாடல்களை எழுதிய (1) திருஞானசம்பந்தர் (2) திருநாவுக்கரசர் (2) சுந்தரர் (4) மாணிக்கவாசகர் ஆகியோரை சமயகுரவர்கள் என்றும் சைவ சமய ஆச்சாரியர்கள் என்றும் கூறுவர்.

இவர்களுடைய பாடல்கள், இன்னும் பல நூல்கள் இவற்றின் அடிப்படையில் சைவ நெறிகளை ஒழுங்குப்படுத்திக் கொடுத்த ஆச்சாரியர்களை சந்தான குரவர்கள் என்பர். கைலையில் உள்ள (1) நந்திதேவர் (2) சனத்குமாரர் (3) சத்தியஞான தரிசினி (4) பரஞ்சோதி ஆகியோர்களே அகச்சந்தான குரவர்கள் என்றழைக்கப்படுவர். நிலவுலகில் வாழ்ந்த (1) மெய்கண்டர் (2) அருணந்தி சிவம் (3) மறைஞான சம்பந்தர் (4) உமாபதி சிவம் ஆகியோரை புறச்சந்தான குரவர்கள் என்பர்.

சமயகுரவர்கள், சந்தான குரவர்கள் ஆகியோர் திருஉருவங்களை சிவாலயங்களில் காணலாம்.

இவர்களுள் சமயகுரவர்கள் கவிஞர்கள். இறைவனை தரிசித்தவர்கள். மூல நூலாசிரியர்கள். சமயத்தின் விதிகள், ஒழுங்குகள், நெறிமுறைகளை விட இறைதரிசனத்திற்கே அதிக முக்கியத்துவம் தந்தவர்கள். இவர்களுடைய உபதேசங்கள் தர்க்கத்துக்கு மேம்பட்டவை.

சந்தான குரவர்கள் பெரும்பாலும் உரையாசிரியர்கள், வழிநூலாசிரியர்கள், சமய உண்மைகளை நெறிப்படுத்தி, தத்துவம், புராணம், சடங்கு, பூஜை இவற்றை சமுதாயத்திற்குப் பயன்படுத்தி பெரும் அளவிலான மக்கள், சமயத்தை அறிவு பூர்வமாகவும் புரிநது கொள்ள வழிவகுத்தவர்கள். தாங்கள் கூறும் எக்கருத்தும் சமயக்குரவர்களின் கருத்துக்கும், உணர்வுக்கும், அனுபவத்துக்கும் வாழ்க்கைக்கும் முரண்படாமல் சமய விளக்கம் தந்தவர்கள் சந்தான குரவர்கள்.



திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் சுந்தரர் மாணிக்கவாசகர்

சிறப்பிடம் பெற்றுள்ளன. உலகப் பண்பாடுகள் எதிலும் பாரத நாட்டைப் போல் மகத்தான உரையாசிரியர்கள் தோன்றியதில்லை என்றே கூறிவிடலாம். பல உரையாசிரியர்கள் மூலநூல் ஆசிரியர்களைப் போலவே செல்வாக்குப் பெற்றுள்ளனர். முதன்மை என்பது புதுமை அன்று. மனப்பூர்வமான நம்பகத்தன்மையே (Originality is not novelty but sincerity) என்று கூறிய தாமஸ் கார்லைலின் கருத்து இங்கு நினைவு கூறத் தக்கது. நம் நாட்டில்

அற்புதமான கவிஞர்கள் தோன்றி உபநிடதம், பிரம்மசூத்திரம், பகவத்கீதை, தொல்காப்பியம், திருக்குறள், தேவாரம், நாலாயிர திவ்விய பிரபந்தம், முதலான மகத்தான மூல நூல்களைக் கவிதை வடிவில் எழுதினார்கள். அக்கவிதை நூல்களின் இலக்கியப்பயனும், ஆன்மீகப் பயனும், சமுதாயப்பயனும், பரவலாகப் பலருக்கும் கிடைக்கும் வண்ணம் கருத்துக்களைத் தெளிவு படுத்தும், ஒருங்கிணைக்கும், வரிசைப்படுத்தும் ஆதிசங்கரர், ராமானுஜர், மத்துவர், நச்சினார்க்கினியர் போன்ற உரையாசிரியர்களும் நம் நாட்டில் தான் தோன்றிப் பணிபுரிந்திருக்கிறார்கள். அது போலவே தேவாரப் பாடல்களின் கருத்துக்களை வரிசைப்படுத்தி சமயக்கட்டமைப்பை அவற்றிலிருந்து வருவித்துக் கொண்டது, சைவ சித்தாந்த பாடியக் காரர்களின் பெரும் பணியாகும். வைணவ நூல்களின் ஈட்டு உரையாசிரியர்களும் கூடக் கவிதையில் சிதறிக்கிடக்கும் கருத்துக்களை வரிசைப்படுத்தி வாழ்க்கையின் நடைமுறைகளாக மாற்றித் தந்தவர்கள் ஆவர். இன்று நாம் காணும் வைணவமே, உரையாசிரியர்களும், ஆச்சாரியர்களும், கவிகளின் கருத்தை ஒருங்கிணைத்துத் தந்த நெறியே என்பாரும் உண்டு. உரையாசிரியர்களின் தருக்கங்களை உள்வாங்கிச் சீரணித்த கவிஞர்களும் பிறகு தோன்றுவது உண்டு. இக்காரணங்களால் நம் நாட்டில் ஒவ்வொரு துறையிலும் கவிதை, உரை, கவிதை என்ற வரிசையில் நூல்கள் எழுந்தன. மிக உயர்ந்த பார்வை கொண்ட மாமனிதர்களின் உணர்வுகள் பாமர மக்களையும், சராசரி மக்களையும் சென்றடைய உதவும் இடைநிலை இலக்கியங்களாக இந்த உரைநூல்கள் பணி செய்தன.

தான் அறக்கட்டளைப் பயிற்சியாளர்கள், மதுரை

**1714) தன்னார்வத் தொண்டு வளர்ச்சித் திட்டங்களில் எந்தெந்தத் துறை வல்லுனர்கட்கு பணிவாய்ப்புகள் இருக்கின்றன?**

அனைத்துத்துறை வல்லுனர்கட்குமே தன்னார்வத் தொண்டு நிறுவனங்களில் வாய்ப்புக்கள் இருக்கின்றன. பரவலான சமுதாய உணர்வு கொண்டு, லாபநோக்கம் ஒன்று மட்டுமே கொள்ளாமல் செயல்படும் நல்லவருக்கு எங்கும் தேவை இருக்கிறது. 1) சுனாமி பூகம்பம் ஆகியவற்றில் வீடிழந்தவர்கட்கு, மாதா அம்ருதானந்தமயீ ஆயிரக்கணக்கான வீடுகள் கட்டித் தந்தார் 2) பாரதீய அக்ரோ பவுண்டேஷன், கிராமப்புற மக்களின் மாடுகளின் பால்வளத்தைப் பெருக்க உழைக்கிறது. 3) எம்.எஸ். சுவாமிநாதன் பவுண்டேஷன் விவசாய ஆராய்ச்சி, களப்பணிகளில் பெரும் பணி ஆற்றுகின்றது. 4) கல்வி நிறுவனங்களைப் பெரும் அளவுக்கு எல்லா தொண்டு நிறுவனங்களுமே நடத்துகின்றன. 5) மலிவு விலை வீடு, எரிசக்தி சேமிப்பு, வளம்குன்றா எரிசக்திகள், பல்லுயிர்ப்பண்பு, கானுயிர் காத்தல் ஆகிய துறைகளில் கடந்த இருபதாண்டுகளில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் நற்பணி ஆற்றுகின்றன. 6) மருத்துவத்துறையில் தொண்டு நிறுவனங்கட்கு நீண்டகால சேவை வரலாறு உண்டு. 7) மக்கள் விழிப்புணர்வு சார்ந்த அனைத்துத்துறைகளிலும் தொண்டு நிறுவனங்கள் முன்னிலை வகிக்கின்றன. 8) மூலிகை மருந்து, மூலிகை சேகரிப்பு, சித்த மருந்து தயாரிப்பு,

நீர்வளம் காத்தல் ஆகிய துறைகளில் காந்திகிராம அறக்கட்டளை பணி ஆற்றுகிறது. 9) பெண்கள் நலம், குழந்தைகள் நலம், முதியோர் நலம் ஆகிய துறைகளிலும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் குறிப்பிடத்தக்க பணி ஆற்றுகின்றன. 10) புறக்கணிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகள் பற்றி சமுதாய விழிப்புணர்வுக்கு தொண்டு நிறுவனங்களின் பணி போற்றத்தக்கது. 11) பிரச்சினைகட்கு சட்டபூர்வமான தீர்வு காண்பதிலும், தன்னார்வ நிறுவனங்களுக்கு சிறப்பிடம் உண்டு.

மக்கள் நலத்தை நாடும் எந்ததுறையிலும் தொண்டு நிறுவனங்கட்கு இடம் இருக்கிறது. வல்லுனர்கள் பணி ஆற்ற வாய்ப்பு இருக்கிறது.

ஏ. முருகவள்ளி, கே. தங்கம்மாள்புரம், தூத்துக்குடி

**1715) ஏன் கடல் தண்ணீரைத் தலையில் தெளிக்கிறார்கள்?**

கடல் தண்ணீரில் பாரத நாட்டின் அனைத்துப்புனித நதிகளும் வந்து இணைவதால் அது மிகப்புனிதமான 'சர்வதீர்த்தம்' ஆகும். அதில் தலை முழுகுவது, அதன் கரையில் பூசை, தர்ப்பணம் (நீர்க்கடன்) செய்வது அதிகப்பலன் தரும். தலை மூழ்கிக் குளிக்க வாய்ப்பு இல்லாதவர்கள் அத்தண்ணீரைத் தலையில் தெளித்துக் கொள்ளவாவது செய்கிறார்கள்.

ஆர். வனஜா, வல்லன்குமாரன்விளை, கன்னியாகுமரி மாவட்டம்.

**1716) திருவிளக்கு பூஜையில் ஏன் நைவேத்தியம் வைக்கிறோம்? அதன் முக்கியத்துவம் என்ன?**

பக்தன் தான் உண்ணும் பொருள் எதுவாக இருந்தாலும் இறைவன்/ இறைவிக்குக் காட்டுவதே முறை. இதனால் அவ்வுணவில் உள்ள குறைகள் நீங்கும் "நிவேதயாமி" என்றால் காண்பிக்கிறேன் என்று பொருள்.

பஞ்சபூதங்களால் ஆன இவ்வுடல், பஞ்சபூதங்களைப் படைத்து, அவற்றை ஆளும் பரம்பொருள் இவற்றை ஒன்றிணைக்க பூஜை / வழிபாடு பயன்படுகிறது.

அவற்றுள் நீர் என்ற பூதம் மனித உடலில் சுவை என்ற புலனின்பமாகவும் நாக்கு என்ற புலனாகவும் இருக்கிறது. ஆகவே நிவேதனப் பொருளை நீரால் புனிதப்படுத்துகிறோம். பிறகு அவ்வுணவு பிரசாதம் ஆகிவிடுகிறது. பாரத நாட்டின் நைவேத்தியப் பிரசாதங்கள் புகழ்பெற்றவை. திருப்பதி லட்டு, பழனி பஞ்சாமிர்தம், ஸ்ரீமுஷ்ணம் கோரைக்கிழங்கு மாவு, அழகர்கோவில் சர்க்கரைப் பொங்கல், நாச்சியார் கோவில் அமுத கலசம், குருவாயூர் பால்பாயசம், ராஜஸ்தான் நாத்த்வாரா நெய்ப்பூரி, பூரிஜகன்னாத் சோறு இப்படிப்பலப்பல.

# இதயத்தைத் திருடும் இனியகதைகள்

சந்திரஸ்வாமி உதாஸீன் கூறியது

## 1720) நவீன நாத்திகர்

நவீன நாத்திகர் நண்டு நடையார் இறைவனை நம்புவது இல்லை. அவர் ஒரு பெரிய தர்க்கவாதி. அனைவரிடமும் அவர் கூறுவார் ‘‘சாமி பூதம் எல்லாம் நம்புவதற்குரியவை அல்லை. நல்லவனாக இரு. நல்லதைச் செய்! அது போதும்!! இறைவனை பஜனை செய்வது, துதிப்பது எல்லாம் வேண்டாம்! மனித சேவை ஒன்றே போதும்’’ என்று அவர் முழங்குவார்!

ஒரு நாள் கிண்டல் கீரியப்பன் நண்டு நடையாரின் வீட்டு வழியே செல்லுகையில் வீட்டிற்குள் எட்டிப் பார்த்தான். நாத்திகர் நண்டு நடையார் ஜபமாலையை உருட்டிக் கொண்டிருந்தார்.

கிண்டல் கீரியப்பன் கேட்டார் ‘‘பண்டிதரே! கையில் ஜபமாலையுடன் என்ன செய்து கொண்டு இருக்கிறீர்கள்?’’

நண்டு நடையார் நகைத்துக் கொண்டே பதில் கூறினார். ‘‘பகவானை நான் இப்போதும் கூட நம்புவதில்லை. ஆனால், அவர் எங்கேயிருந்தாவது புறப்பட்டு என் எதிரில் வந்து விட்டால் என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்’’.

நவீன நாத்திகர்கள் போக்கைப் பாருங்கள்! உபதேசம் ஊருக்குத்தான்!

சிருங்கேரி சங்கராச்சாரியார் கூறியது

## 1721) கண்ணால் காண்பதையே நம்ப முடியவில்லையே!

பார்ஜு என்பவன் மன்னன் வெற்றுக் கண்ணனின் அவையில் இருந்தான். மன்னனுக்கு பார்ஜுவை மிகவும் பிடிக்கும். இதைக்கண்ட, அவையில் இருந்த பிறர் பொறாமை கொண்டனர். சதித் திட்டம் தீட்டி அவர்கள். பார்ஜுவின் கண்களையும் கை கால்களையும் கட்டி அவனைக் கடத்தி கொண்டு போயினர். தொலைதூரக்காடு ஒன்றின் உள்ளே அவனை விட்டு விட்டுச் சென்று விட்டனர்.

மன்னன் வெற்றுக் கண்ணனிடம், அவையோர் ‘‘பார்ஜு இறந்து விட்டார். அவருடைய ஈமச் சடங்குகள் முடிந்து விட்டன’’ என்று தினம் தினம் கூறி அவனை நம்ப வைத்து விட்டனர்.

இப்பக்கத்திற்கான விளம்பர நிதி உதவி விவேகானந்தா இன்ஸ்டிட்யூட் ஆஃப் லிங்க்விஸ்டிக் ஸ்கில்ஸ் பிரைவேட் (லிட்) சென்னை – 600 049

காட்டில் விடப்பட்ட பார்ஜுவை, வழிப்போக்கன் ஒருவன் காப்பாற்றினான். பார்ஜுவின் கண் கட்டு, கைகால் கட்டுக்களை அப்புதியவன் அவிழ்த்து விட்டான். பார்ஜுவின் சொந்த நாட்டுக்குப் போகும் திசையில் அவனை அனுப்பி வைத்தான் அப்புதியவன்.

பார்ஜு படிப்படியாகச் சொந்த நாட்டை நோக்கி நடந்து கொண்டிருந்தான்.நெடுநாளாகியும் அவனைக் காணாத வெற்றுக் கண்ணன், பார்ஜு இறந்து விட்டான் என்பதை முழுமையாக நம்பிவிட்டான்.

ஒரு நாள் பார்ஜு மன்னனைக் கண்டான். தன்னை மிகவும் விரும்பும் மன்னன் வெற்றுக் கண்ணன், தன்னை கண்டதும் மிகவும் மகிழ்வான் என்று அவனருகே ஓடினான் பார்ஜு.

மன்னன் வெற்றுக் கண்ணன், பார்ஜுவைக் கண்டு திடுக்கிட்டான். செத்துப் போன பார்ஜு இங்கே வந்தது எப்படி? வந்திருப்பது பார்ஜுவின் பிசாசாகத்தான் இருக்க வேண்டும். பயத்தால் நடுங்கிய மன்னன் வெற்றுக்கண்ணன் விழுந்தடித்துக் கொண்டு அந்த இடத்தில் இருந்து ஓடியே போய் விட்டான். ஒன்றுமே புரியாத பார்ஜு திகைத்து நின்றான் அங்கேயே! அவனுக்கு வருத்தம் தாங்க முடியவில்லை.

வெற்றுக்கண்ணனின் கண்களில் குறையொன்றும் இல்லை. அவன் கண் முன் தெரிந்த பார்ஜுவின் உருவம் பிழையறத் தெரிந்தது. ஆனால் அரசனின் சிந்தனை குழம்பி இருந்ததால் அவன் கண்டதன் சரியான பொருளை அவனால் புரிந்து கொள்ள தெரியவில்லை.

உபநிஷதங்களாகிய கண்கள் நமக்கு பரம்பொருள் பற்றிய உண்மையையே காட்டுகின்றன. ஆனால் அறிவின் தெளிவற்ற பாமரமக்களால் அந்த உண்மையைக் கண்டு கொள்ள முடியவில்லை. அவர்கள் புலன்கள் தரும் இன்பத்தில் மூழ்கிப்போய் உண்மை கண்ணுக்குத் தெரிந்தாலும் அதனைக் காண இயலாமல் துன்புறுகின்றனர்.

விநோபாஜி கூறியது

## 1722) ஆசையுள்ள பக்திக்கும் சிறிது மதிப்புண்டு

ஸ்ரீ பக்த ஞானேஸ்வரர்



எல்லாவற்றையுமே ஆண்டவனிடம்தான் கேட்க வேண்டும் என்றுள்ள போக்கு சாதாரணமானதல்ல, அசாதாரணமானது. ஞானதேவர் நாமதேவரிடம், “க்ஷேத்திர யாத்திரைக்கு வருகிறாயா?” என்று கேட்டார், நாமதேவர், “எதற்காக?” என்று பதில் கேள்வி கேட்டார். ஞானதேவர், “சாது-மகாத்மாக்களின் பழக்கம் ஏற்படும்” என்று பதில் சொன்னார். அதற்கு நாமதேவர், “அப்படியானால் பகவானிடம்

கேட்டுக்கொண்டு வருகிறேன்'' என்று சொல்லிவிட்டு கோயிலுக்குள் போய் பகவானெதிரில் நின்றார். அவர் கண்களிலிருந்து கண்ணீர் வழியத் தொடங்கியது; பகவானது பாதங்களை உற்று நோக்கியவாறே நின்றார். இறுதியில் அழுதுகொண்டே, ''பிரபுவே, நான் போகவா?'' என்று கேட்டார். ஞானதேவர் பக்கத்திலேயே இருந்தார். அந்த நாமதேவரை நீங்கள் பித்தர் என்பீர்களா? வீட்டில் மனைவி இல்லாமையால் அழுகிறவர்களுக்குக் குறைவில்லை. ஆனால் பயனைக் கருதும் ஸகாமனாயிருந்த போதிலும் ஆண்டவனிடம் போய் அழுவோன் சாதாரணமானவன் அல்ல. உண்மையில் கோரத்தக்கதை அவன் கோராமைக்குக் காரணம் அவனது அஞ்ஞானமே என்று அறிய வேண்டும். ஆனால் இதனாலேயே அவனது ஸகாம பக்தியை அசட்டை செய்யத் தக்கதென்று கருதலாகாது.

ஏக்நாத்ஜி கூறியது

## 1723) நீ பிறரைக் கவனிக்கும்போது மூன்றாமவர் உன்னைக் கவனிக்கிறார்

இத்தருணத்தில் உனக்கு என்னுடைய சொந்த அனுபவத்தையே கூற விரும்புவேன். எனக்கு வழிகாட்டவோ, புத்திமதிகள் அளிக்கவோ யாரும் இல்லாத நிலையில் நானே கடும் துன்பங்களுக்கிடையே எல்லா விஷயங்களையும் சுயமுயற்சியால் கற்றுக்கொள்ள வேண்டி வந்தது. ஒரு சமயம் ஒருவன் தன் மனைவியிடம் பெரும் சண்டையிட்டு வீட்டை விட்டு வெளியேறும் சம்பவத்தை நான் காண நேர்ந்தது. அது பற்றி மனிதாபிமான உணர்ச்சியினால் பச்சாதாபமடைந்து அதில் நான் தலையிட நேர்ந்தது. நான்கு நாட்களாக அவன் வீடு திரும்பவில்லை. அவனுடைய விபரம் ஏதும் தெரியவில்லை. அவனைத் தேடித் திரும்ப வீட்டுக்கு அழைத்து வரும் பொறுப்பு அண்டை அயலார்களால் என்னிடம் சுமத்தப்பட்டது. நான் அவனைத் தேடிச் சென்றபோது அதிர்ஷ்ட வசமாக இந்தோரில் ஒரு சத்திரத்தில் அவனைக் கண்டு பிடித்தேன். அவன் நடவடிக்கைகளைக் கவனமாகக் கண்காணித்து ஒரு நாள் அவனை அவனுடைய அறையிலேயே வைத்துப் பிடித்தேன். ஆனால் அவனோ என்னை அறையை விட்டு சிறிதும் வெளியேற அனுமதிக்கவில்லை. எப்படியோ சந்தர்ப்ப வசமாக பக்கத்து அறையில் வசித்து வந்த ஒரு மாணவனின் உதவியை நாடி அந்த மனிதனின் உறவினருக்கு செய்தி அனுப்பினேன். அது கிடைத்தவுடன் மனைவியும், குழந்தைகளும் வந்துவிட்டனர். குடும்பத்தினர் யாவரையும் அறையில் விட்டுவிட்டு நான் மகிழ்ச்சியுடன் வெளியே கிளம்பிச் சொல்லலானேன். சிறிது தூரம் நான் சென்றிருப்பேன். என்னைக் காவல் துறையினர் கண்காணித்து தொடர்ந்து வருவதைக் கண்டு திடுக்கிட்டேன். போலீஸ்காரன் என்னை அணுகி, காவல்நிலையத்துக்கு அழைத்துச் சென்று என்னிடம், நான் யார், நான் இரகசியமாகச் செயல்படுவதன் நோக்கம் பற்றிய கேள்விக் கணைகளைத் தொடுத்தான். அச்சமயம் அம்மாநிலத்தில் பயங்கரவாதிகளின்

நடமாட்டம் அதிகமாக இருந்து வந்தது! மிக்க சிரமத்துடன் அவர்களுக்கு என் நிலைமையை விளக்கிய பிறகே நான் காவல் நிலையத்திலிருந்து விடுவிக்கப்பட்டேன்.

நரேந்திரவாணியில் இருந்து

## 1724) மறுகுளியல்

கோதாவரி நதிக்கரையில் ஒரு புனிதர் தீர்த்தசாமி வசித்து வந்தார். அவருடைய தவத்தைக் கண்டு அவ்வூர் மக்கள் அவரைப் பெரிதும் மதித்தனர். அவர் தவதியானத்தில் ஈடுபட்டிருக்கம் போது யாரும் அவரை தொந்தரவு செய்யமாட்டார்கள்.

ஒரு நாள் தீர்த்தசாமி நதியில் நீராடி கரையில் ஒரு கல்லின் மீது உட்கார்ந்து தவம் இயற்றிக் கொண்டிருந்தார். ஊர் மக்கள் அவரிடம் இருந்து விலகிச் சென்று அமைதியாக நீராடி மீண்டனர்.

அவருடைய பெருமையை அறியாத சிறுவன் சீராளன் அவர் அருகில் வந்து, தண்ணீரில் குபீர் என்று பாய்ந்தான். தீர்த்தசாமி மீது தண்ணீர் தெளித்தது.

கடும் கோபத்துடன் தீர்த்தசாமி கண் விழித்துப் பார்த்தார். ‘‘யாரடா நீ பயலே’’ கோபத்தால் அவர் முகம் துடித்தது.

‘‘மயானம் காக்கும் மாடன் மகனுங்க’’ சிறுவன் பணிவுடன் கூறினான்.

தீர்த்தசாமி சிறுவனை ஓங்கி ஒரு அறைவிட்டார். ‘‘என்ன தைரியம் இருந்தால் தீண்டத்தகாத நீ என்மீது தண்ணீர் தெளிப்பாய்?’’.

கூச்சல்போட்டு விட்டு, தீர்த்தசாமி கோதாவரியில் புகுந்து இன்னொரு முழுக்குப் போட்டார்.

சீராளனும் கோதாவரியில் இன்னொரு முழுக்குப் போட்டான்.

எதுக்கடா இன்னொரு முழுக்குப் போடுகிறாய்? தீர்த்தசாமி சீராளனைக் கேட்டார்.

சீராளன் கூறினான்: நீங்கள் என்னை அறைய வந்த போது, உங்கள் புருவம் நெரிந்தது. மூக்கு நுனி சிவந்தது. பற்கள் நெற நெறவென்று கடித்துக் கொண்டன. முகம் கோணிப் போயிற்று. உங்கள் உடலில் இருந்து ஒரு பூதம் வெளியே வந்து என்னைத் தாக்கிற்று. அந்த பூதம் துறவியின் கோபம் எனப்படும். அது தீண்டத்தகாததுசாமி. அது என்னைத் தொட்டுவிட்டதே என்று நான் மறுமுழுக்குப் போட்டேன்.

தீர்த்தசாமிக்கு அவமானமாகப் போயிற்று. அச்சிறுவனிடம் அவர் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். அன்று முதல் அவர் அனைவரிடமும் பணிவுடனும் அன்புடனும் நடந்து கொள்ள ஆரம்பித்தார்.

நரேந்திரவாணியில் இருந்து

## 1725) ஆண்டு பலவாக

கவிஞர் ஹென்றி வாட்ஸ்வர்த் லாங் ஃபெல்லோ வயது முதிர்ந்து இருந்தார். அவர் தலை முற்றிலும் நரைத்துப் பஞ்சு போல இருந்தது. ஆனால் அவரோ சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டு இருந்தார். இதற்குக் காரணம் என்ன என்று ஒரு நண்பர் கேட்டார்.

அருகில் மலரால் மூடியிருந்த ஒரு ஆப்பிள் மரத்தை லாங் ஃபெல்லோ சுட்டிக் காட்டினார். “இந்த மரம் மிகவும் வயதானது. ஆனால் இந்த ஆண்டு மிக அழகிய மலர்களை அது நமக்குத் தந்திருக்கிறது. அந்த மரத்தில் ஒவ்வொரு ஆண்டும் புதிய மரப்பகுதி வளர்கின்றது. அந்த ஆப்பிள் மரத்தைப் போல நானும் ஒவ்வொரு ஆண்டும் சிறிய அளவில் என்னைப் புதுப்பித்துக் கொள்கிறேன். புதிய மரப்பகுதியை வளர்த்துக் கொள்கிறேன்”.

ஜே.பி வாஸ்வானி கூறியது

## 1726) புரைதீர்ந்த நன்மை பயக்கும் எனின் . . .

அழுமூஞ்சி அப்பாசாமியும் நன்றியாளன் நல்லசாமியும் கடலில் வெகுதூரம் மீன் பிடிக்கச் சென்றனர். அவர்கள் போன கப்பல் நீரில் மூழ்கி இருவரும் மட்டும் ஒரு ஆளில்லாத தீவில் கரையேறினர்.

அழுமூஞ்சி அப்பாசாமி தன் தலைவிதியை எண்ணிக் கடவுளைக் குறை கூறிக் கொண்டே இருந்தார்.

நன்றியாளன் நல்லசாமியோ இந்தத் தீவாவது நமக்கு எட்டியதே என்று கடவுளுக்கு நன்றி கூறிக்கொண்டே இருப்பான்.

இருவரும் அத்தீவில் இருந்த ஓலைகளைக் கொண்டு ஒரு குடிசை அமைத்தனர். தீவில் கிடைத்த கட்டைகளை உரசி நெருப்பு உண்டாக்கி, கடல் மீன்களை வாட்டி உண்டனர். தேங்காய்களும் உணவாயின.


சில மாதங்கள் அப்பாசாமியின் அழுகுரலிலும் நல்லசாமியின் நன்றிக்குரலிலும் கழிந்தன.

ஒரு நாள் ஓலைக்குடிசை நெருப்பில் பற்றி எரிந்தது; முற்றிலுமாக அழிந்தது. அப்பாசாமியின் அழுகை உச்சக் குரலை எட்டிற்று.

நல்லசாமியோ, இதுவும் கடவுள் அருளே என்று நன்றியுடன் பிரார்த்தித்தான்.

நமக்கு இருந்த ஒரே குடிசையும் அழிந்ததில் நன்றி வேறு பாராட்ட வேண்டுமோ உன் கடவுளுக்கு என்று எரிந்து விழுந்தார் அப்பாசாமி.

இவ்விபத்தில் என்ன நன்மை மறைந்து கிடக்கிறதோ, யாருக்குத் தெரியும் என்றான் நல்லசாமி!



கொஞ்ச நேரத்தில் ஒரு சிறிய மோட்டார்ப்படகு அத்தீவருகே வந்தது. அதில் இருந்த கேப்டன் கேடிலியப்பன் பேசினான். ‘‘எங்கள் பெரிய கப்பல் இந்த வழியே போய்க் கொண்டிருந்தது. இங்கிருக்கும் சிறிய தீவுகள் ஆள் வசிக்காத சூனியத் தீவுகள் என்று தான் நினைத்துக் கொண்டிருந்தேன். திடீரென்று இங்கிருந்து புகையும் நெருப்பும் கிளம்பவே ஆச்சரியப்பட்டுத் தேடி வந்தேன். உங்களைக் கண்டேன். வாருங்கள் கப்பலுக்கு’’ என்று அழைத்தார். அமூமூஞ்சி அப்பாசாமிக்கு அகமும் முகமும் மலர்ந்தன. கடவுளே உங்களுக்கு நன்றி. என் குடிசையை எரித்தீர்கள்! ஆனால் என் உயிரையே மீட்டுத்தந்தீர்கள்.

அப்பாசாமியும் நல்லசாமியும் திரும்பத்திரும்ப இறைவனுக்க நன்றி கூறினர்.

## 1727) வறட்சி

உலக போதகர் உலர்நாதர் ஒரு பயங்கரமான ஆசாமி. மக்கள் அவரைப் பார்த்தாலே நடுங்குவர். அவர் முகத்தில் புன்னகையே மலராது. துறவுப் பயிற்சிகளை அவர் பிடிவாதமாகப் பின்பற்றுவார். தன்னைத்தானே துன்புறுத்திக் கொள்வது என்றால் அவருக்கு மிகவும் பிடிக்கும். அடிக்கடி பட்டினி கிடப்பார் அவர். குளிர்காலத்திலும் சிற்றுடையே அணிந்திருப்பார் அவர்.

தன் ரகசிய வலி, துன்பங்களை அவர் ஒரு நாள் குருநாதர் கோமளசாமியிடம் கூறிவிட்டார்.

‘‘நான் தியாக வாழ்க்கை வாழ்ந்திருக்கிறேன். சமயக் கொள்கைகளை விடாமல் பின்பற்றி இருக்கிறேன். ஆனால் நான் ஏதோ ஒன்றை இழந்து விட்டது போல், எனக்குத் தோன்றுகிறது. ஏதோ ஒன்று எனக்குக் கைநழுவிப் போய்விட்டது. அது என்ன?’’

குரு கோமளசாமி விடை இறுத்தார் "ஆத்மாவும், ஜீவசக்தியும், அன்பும்".

"நான் ஒரு வறட்டுத் துறவி ஆகிவிடக்கூடாது" என்று ஸ்ரீராமகிருஷ்ணர் பிரார்த்திப்பது வழக்கம்.

ராதாஸ்வாமி சத்சங்கத்தினர் கூறியது

## 1728) இரும்பு எடுத்தவன் இரும்பினால் சாவான்

தாது தயாள் கூறுகிறார். கடல் அலைகள் எண்ணிறந்தவை. அது போல மனத்தின் எண்ணங்களும் பலப்பல. அவற்றை அமைதியுறச் செய்யுங்கள். எண்ணங்களை இறைவனை நோக்கிச் செலுத்துங்கள். ஒரு வனத்தில் ஒரு ரிஷி தவம் செய்து கொண்டிருந்தார். தேவராஜனான இந்திரன் இந்த ரிஷி தவ வலிமையால் இந்திர பதவியையே பெற்று விடுவாரோ என்று அஞ்சினான்.

இந்த ரிஷியின் தவத்தைக் கெடுத்து அவருடைய வளர்ச்சியைத் தடுக்க வேண்டும் என்று தேவராஜன் எண்ணினான்.

அவன் ஒரு வேடனைப் போல வேடம் பூண்டான். கையில் ஒரு வில்லையும் அம்பையும் எடுத்துக் கொண்டு பூமிக்கு வந்தான். ரிஷி இருந்த இடத்திற்குப் போனான். விழுந்து அவரை வணங்கினான். புனிதரே, நான் ஒரு வேடன். நான் நீண்டதூரம் காலால் நடந்து பயணம் செல்கிறேன். நீங்கள் எனக்கு உதவ வேண்டும். அதற்கு நான் நன்றி பாராட்டுவேன். இந்த வில்லும் அம்பும் மிகவும் கனமாக இருக்கின்றன. இவற்றைத் தூக்கிக் கொண்டு என்னால் நடக்க முடியாது. இவற்றைப் பாதுகாப்பாக வைத்திருந்து, நான் திரும்பி வந்ததும் என்னிடம் கொடுப்பீர்களா,

ரிஷி தயங்கினார் வில்லும் அம்புமா? வேடன், நான் இந்தக் கொலைக்கருவிகளைப் பார்க்கவும் கூசுவேன் என்றார் ரிஷி.


வேடன் கெஞ்சினான்: "ரிஷியே, நான் உங்களைத் தொந்தரவு செய்யமாட்டேன். உங்கள் ஆசிரமத்தின் பின்பகுதியில் ஒதுக்குப்புறமாக இவற்றை வைத்துச் செல்வேன். யாருக்கும் இந்த வில்–அம்பால் இடைஞ்சல் ஏற்படாது" என்றார் அவர்.

பக்தர்களுக்கே உரிய கருணையுடன் ரிஷி மனம் இளகி, வில், அம்பைப் பாதுகாத்துக் கொடுக்கச் சம்மதித்தார். வில் அம்பை, பின்பக்கத்தில் ஆசிரமத்திலேயே வைத்துவிட்டு, வேடன் புறப்பட்டுப் போய்விட்டான்.

அந்த ரிஷி தினம் தினம் தன் தியானம் முடிந்ததும், வில்லும் அம்பும் பாதுகாப்பாக இருக்கின்றனவா என்று சென்று பார்ப்பார்.

அந்த ரிஷி ஒரு மன்னனாக இருந்து, துறவு மேற்கொண்டவர். மன்னனாக இருந்த போது, அம்பு எய்தும் கலையில் அவர் வல்லவராக இருந்தார். இந்த அழகிய, கூர்மையான அம்பையும் நல்ல வில்லையும் பார்த்து அவர் மனத்தில் பழைய நினைவுகள் துளிர்விட்டன.

ஒரு நாள் தன் ஆவல் மீதூற ரிஷி, அந்த வில்லை எடுத்தார். அம்பைப் பொருத்தி அதனை எய்தினார். அம்பு வேகமாகத் தன் குறியை நோக்கிச் சென்றது.



அவருக்குத்தன் திறமை பற்றிய மகிழ்ச்சி எழுந்தது. அவரால் அடுத்த அடுத்த நாட்களில் தன் ஆர்வத்தை அடக்கவே முடியவில்லை. ஒவ்வொரு நாளும் சிறிது சிறிதாக , அவர் தன் பயிற்சி நேரத்தை அதிகரித்துக் கொண்டே போனார்.

அதிகம் பேசுவானேன்! கடைசியில் அந்த ரிஷி ஒரு வேடனாகவே மாறி, காட்டுமிருகங்களை வேட்டையாடத் தொடங்கினார். அவர் தொடவே விரும்பாத வில்லும் அம்பும், அவருடைய இணைபிரியாத அங்கங்கள் போல் ஆகிவிட்டன.

ரிஷி ஒரு கொலைகார வேடன் ஆனார். அவர் தவம் தடைப்பட்டது. இந்திரனின் பயமும் நீங்கியது.

இப்படித்தான் நம்மனம் நம்மை ஒரு முட்டாளாக்குகிறது. அதற்குக் கொஞ்சம் சலுகை காட்டினால் போதும். அது நம்மைக் கவிழ்த்து விடுகிறது. அதன் பாட்டுக்கு நாம் தாளம் போட வேண்டியதாகி விடுகிறது.

## சந்திரஸ்வாமி உதாஸீன் கூறியது

## 1729) இறைபக்தியின் வலிமை

ஷேக்பரீத் என்ற சூபி முனிவரிடம் ஒரு பக்தர் கேட்டார். ஏசுநாதரை சிலுவையில் அறைந்தார்கள். சமஸ்தப்ரேஜ் உயிருடன் இருக்கும் போதே அவர் தோலை உரித்தார்கள். மன்சூரின் உடல் உறுப்புக்களை, வெட்டி வெட்டிப் போட்டார்கள். ஆனால் இவர்கள் எல்லாரும் பெருமூச்சும் விடவில்லை. முனகவும்

இல்லை! இவ்வளவு பயங்கரத் துன்பத்தைத் தாங்கிக் கொள்ளும் தகுதி அவர்கட்கு எங்கிருந்து வந்தது?

ஷேக்ஸாஹிப் தன் சீடரிடம் ஒரு முற்றாத தேங்காயைக் கொடுத்து இதில் வெள்ளைப் பகுதியைத் தோண்டி எடு என்றார். அச்சீடரால் முடியவில்லை. ஷேக்ஸாஹிப் அவரிடம் நன்கு முற்றிய கொப்பரைத் தேங்காயைக் கொடுத்து ''வெள்ளைப் பகுதியைத் தனியே எடு'' என்றார். மிக எளிதாக அந்த பக்தர் தேங்காயின் கொப்பரையைத் தனியே எடுத்து விட்டார்.

ஷேக் ஃபரீத் கூறினார். ஞானி முற்றிய கொப்பரைத் தேங்காய் போன்றவர். ஞானம் அற்றவர்கள், இளநீர்த் தேங்காய் போன்றவர்கள். ஞானிகள் தங்கள் உடல், உடலின் சுகதுக்கங்கள். இவற்றில் இருந்து தங்களைப் பிரித்து எடுத்து விட்டார்கள்.

**கருத்து:–** பிரபு பிரேமையினால் பக்தர்கட்கு ஆத்மாவில் ஞானம் நிலைத்து, உடல் துன்பம் எது வந்தாலும் அதனை ஆனந்தமாகப் பொறுத்துக் கொள்ளும் சக்தி வந்து விடுகிறது.



2009 - 2010-க்கான கல்லூரி ஆசிரியர்களுக்கான கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற ஆக்கம், ஆங்கில மூலம்

**திருமதி ஏ. டார்சிஸ், தாவரவியல் துறைத்தலைவர்,**
**சீதாலட்சுமி ஆச்சி மகளிர் கல்லூரி, பள்ளத்தூர்,**
தமிழாக்கமும், சுருக்கமும்
**திருமதி செ. கலைச்செல்வா,**

# புவி வெப்பமயமாதலின் விளைவுகளும், கட்டுப்படுத்தும் முறைகளும்

புவிப்பரப்பிலும், வளிமண்டலத்தில் கீழ்ப்பகுதியிலும் அகச்சிவப்புக் கதிர்களின் வெளிப்பாட்டின் விளைவாகவும் பசுமை இல்ல விளைவு ஏற்படும். இது முதன்முதலில் ஜோசம் ஃபூரியர் என்பவரால் 1825-ல் கண்டுபிடிக்கப்பட்டது. முதன் முதலில் 1896-ல் ஸ்வான்டே அர்ஹீனியஸ் என்பவரால் இது பற்றிய ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. அகச்சிவப்புக் கதிர்வீச்சால் மட்டுமல்ல, மனித நடவடிக்கைகள் மூலமும் கூட பசுமை இல்ல விளைவு ஏற்படுகிறது என்பதை மக்கள் ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள். மனித நடவடிக்கைகளுக்கேற்றாற் போல பசுமை இல்ல வாயுக்களின் செறிவு, பசுமை இல்ல விளைவு முதலியன அதிகரிக்கின்றன.

இயற்கையில் ஏற்படும் பசுமை இல்ல வாயுக்களின் வெப்பவிளைவானது 33$^{0}$ ஸி (59$^{0}$ எஃப்) ஆகும். முக்கிய பசுமை இல்ல வாயுக்களாவன:

நீராவியின் மூலம் ஏற்படும் பசுமை இல்ல விளைவு 36-70%;

கார்பன்டை ஆக்ஸைடின் மூலம் ஏற்படும் விளைவு 9-26%;

மீத்தேனின் மூலம் ஏற்படும் விளைவு 4-9%;

ஓசோனின் மூலம் ஏற்படும் விளைவு 3-7% ஆகும்.

மேகங்களும் கதிர்வீச்சுச் சமநிலையைப் பாதிக்கின்றன. ஆனால் அவை நீர் அல்லது பனிக்கட்டியினால் ஆனதால் அவை நீராவியினின்றும், மற்ற வாயுக்களினின்றும் பிரிக்கப்பட்டுள்ளன.

தொழிற்புரட்சி தொடங்கியதிலிருந்து, மனிதச் செயல்பாடுகளினால் வளிமண்டலத்திலுள்ள பசுமை இல்ல வாயுக்களான கார்பன்டை ஆக்ஸைடு, மீத்தேன், ட்ரோபோஸ்பெரிக் ஓசோன், க்ளோரோப்ளூரோ கார்பன்கள் மற்றும் நைட்ரஸ் ஆக்ஸைடுகளிலிருந்து வெளிவரும் கதிர்வீச்சுத்திறன் அளவு அதிகரித்துள்ளது. கார்பன்-டை-ஆக்ஸைடு மற்றும் மீத்தேனின் செறிவு கடந்து

1750-களிலிருந்து 36% மற்றும் 48% மாக உயர்ந்திருக்கிறது. இந்த அளவானது முந்தைய 6,50,000 ஆண்டுகளில் காணப்படாத அதிகரிப்பாகும். இது பனி மையப்பகுதிகளினின்று எடுக்கப்பட்ட மெய்யான விவரங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற நம்பகத் தன்மையுடைய உண்மையாகும். கடந்த 20 ஆண்டுகளில் மனிதச் செயல்பாடுகளினால் ஏற்பட்ட புதை வடிவ எரிபொருள் எரிப்பினால் கார்பன்டை ஆக்ஸைடு வாயுவின் அளவு முக்கால் பங்கு அதிகரித்துள்ளது.

பன்னாட்டு தட்பவெப்பநிலை கட்டுப்பாட்டு ஆணையத்தின் சிறப்பு அறிக்கையின் படி 2100- ஆம் ஆண்டிற்குள் கார்பன்டை ஆக்ஸைடு அளவானது 541 முதல் 970 பி.பி.எம். வரை அதிகரிக்கும். சில சமயங்களில் ஸ்ட்ரேட்டோஸ்பெரிக் ஓசோனின் சிதைவானது புவி வெப்பமடைதலுக்கு தொடர்புடையதாகக் கருதப்படுகிறது. ஆனாலும் இவை இரண்டிற்குமிடையேயுள்ள தொடர்பானது பலமற்றதாகும். 1970-களின் பின்பாதி வரை ஸ்ட்ரேட்டோஸ்பெரிக் ஓசோன் குறைவானது ஒரு குளுமையான விளைவை ஏற்படுத்தியதே தவிர கணிசமான அளவிற்கு ஓசோன் தேய்வை (குறைவை) அது உருவாக்கவில்லை. ட்ரோபோஸ்பெரிக் ஓசோனே புவிப்பரப்பு சூடேறுவதற்குக் காரணமான பங்கைத் தருகிறது.

## பரமக்குடியில் யோகமுகாம்

25-4-2011 முதல் 1-5-2011 வரை பரமக்குடியில் நடந்த யோகப்பயிற்சி பன்முக வளர்ச்சி முகாமில் திரு செல்வராஜ், திருமதி செல்வராணி, திரு சுரேஷ் கண்ணன், திருமதி ராஜேஸ்வரி பாஸ்கர பாண்டியன், திரு கணேச பாண்டியன், ஆசிரியர் திரு பிரகாஷ், திரு ராஜாராம் ஆகியோர் நிகழ்ச்சி நடத்தியும் பங்கேற்றும் சிறப்பித்தனர். 58 மாணவர்கட்கு, யோகா, திருமூவர் வாழ்க்கை வரலாறு, கைவினைப்பயிற்சிகள், விளையாட்டுக்கள், பாடல்பயிற்சி ஆகியவை பாடமாக அமைந்தன. நிறைவு நாளில் 40 பெற்றோர்களுக்குப் பாதபூஜை செய்விக்கப்பட்டது.

சிறப்புரை பேராசிரியர் அழ. அறிவழகன் -

தகவல் ஒருங்கிணைப்பு திரு. கே. செல்வராஜ்





♦ ♦ ♦ ♦

## வெள்ளைத் தாமரையின் இதழ்கள்

# மிதிலைப்பட்டிக் கவிராயர்கள் வாழ்வும், வாக்கும்

### முனைவர் எம். எஸ். லக்ஷ்மி

**தருமு பப்ளிகேஷன்ஸ், சிங்கப்பூர் - 530 550 - சித்தன் கலைக்கூடம், 39 இரண்டாம் மாடி வடக்குச் சாலை, சி.ஐ.ற்றி நகர் (மேற்கு), சென்னை - 600 035, அமெரிக்க டாலர் 25 அல்லது ரூ. 250**

♦ ♦ ♦ ♦

அரசியல் அதிகாரத்தைப் போல் மொழியையும் மக்களுக்குச் சொந்தமாக்கி அவர்கள் பேசும் நடையிலும், அவர்கள் புரிந்து கொள்ளும் விதத்திலும், முடிந்தால் பங்கேற்றுப் படைக்கும் விதத்திலும் மொழியை எளிமைப்படுத்துவது ஒரு வரலாற்றுச் செல்நெறி. அப்படிச் செய்த பல புலவர்களின் சிற்றிலக்கியங்களை தனிப்பாடல் திரட்டுக்களில் நாம் காணலாம். பழைய நினைவுகளுடன், ஓலைச்சுவடிகளும், இலக்கணச் சுவையும் இவ்விடைக்காலக் கவிராயர்களின் (கவியரசர் என்பதின் சிதைவு) நிறையக் கிடைக்கும். நிறையச் சிலேடை, ஏசல்கிண்டல், நிறைய இலக்கணவிதிகள், சராசரிக்கு மேலான பாலுணர்வுச் சித்தரிப்புக்கள், சிற்றரசர் துதி, உடனடி பயன் எதிர்பார்ப்பு ஆகியவை இக்கால இலக்கியத்தின் அடையாளங்கள்.

மிதிலைப்பட்டி இன்றைய புதுக்கோட்டை மாவட்ட திருமயம் தாலுக்காவில் உள்ள ஒரு கிராமம். இவ்வூர்க் கவிராயர்கள் ஓலைச்சுவடிகளைப் பாதுகாத்து வைத்து, தமிழ்த்தாத்தா உ.வே. சாமிநாதய்யர் அவர்களிடம் கொடுத்தருளினார்கள். அவரும் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய செவ்வியல் காப்பியங்களின் இறுதிப் படிவங்களைத் தயாரிக்க மிதிலைப்பட்டிச் சுவடிகள் தனக்கு உதவியதாகக் கூறியுள்ளார். தமிழ்த்தெய்வம் உறையும் கோயிலாக, உ.வே.சா. மிதிலைப்பட்டியைக் கண்டார்.


பாறை நினைவாலச் சிற்பி திரு. எஸ்.கே. ஆச்சாரி அவர்களின் குலதெய்வம் கோவில் கொண்ட ஊர் மிதிலைப்பட்டி. இவ்வூர் கேந்திர அன்பர்கள் திரு. நாகராஜனும், திரு நாகரத்தினமும், முனைவர் எம்.எஸ். லக்ஷ்மியின் முனைவர் பட்ட ஆய்வேடான **மிதிலைப்பட்டிக் கவிராயர்கள் வாழ்வும் வாக்கும்** என்ற இந்நூலைக் கேந்திரத்திற்குக் கொடுத்து உதவினார்கள்.

பதினேழாம் நூற்றாண்டில் ஆதி சிற்றம்பலக் கவிராயர் என்பார் மல்லையூர் எனும் ஊரில் இருந்து மிதிலைப்பட்டி வந்து சேர்ந்தார். அடுத்து வந்த ஏழு தலைமுறையினர் பெரும்பாலும் கவிராயர்களாக இருந்து தமிழன்னையை ஆராதித்து வந்துள்ளனர். குழந்தைக் கவிராயர் என்ற பெயரில் மூவரும், சிற்றம்பலக் கவிராயர் எனும் பெயரில் அறுவரும் கவிஞர்களாகத் திகழ்ந்துள்ளனர்.

இன்றும் கவிராயர் மரபு தொடர்கிறது. அவர்கள் வீடு ''ஐயா வீடு''என்ற பெயரில் பாழடைந்த நிலையில் இன்னும் இருக்கிறது. கவிராயர் வம்சாவளியில் பெண்பாற்புலவர்களும் உண்டு.

பல துறைகளைச் சேர்ந்த 228 நூல்களையும் காத்து வைத்து நூலக ஆராய்ச்சிக்கு வழங்கி இவர்கள் அழியாப் புகழ் தேடிக் கொண்டனர்.

வெங்காளப்ப நாயக்கர் எனும் சிறுநில மன்னரைப்பாடி மிதிலைப்பட்டியை தானமாக சிற்றம்பலக் கவிராயர் பெற்று இங்கே வாழத் தொடங்கினார். கவிராயர்கள் மான் விடு தூது, பிள்ளைத்தூது, துகில் விடு தூது, வசைத்தூது நூல்கள் ஆகிய பல்விதப் பாடல்களையும், இசை வடிவம் மிக்க, கீர்த்தனைகளையும் பாடினர். திருமலை சேதுபதி, தாண்டவராயப் பிள்ளை, முத்து வடுகநாதன், சிவந்தெழுந்த பல்லவராயன் ஆகியோர் இவர்கள் போற்றிய பாட்டுத் தலைவர்கள். இருபத்திரண்டு இலக்கிய வகைகள், பத்துத் தலைமுறைக் கவிஞர்கள், சரசுவதி மகால் எனும் அரிய நூலகம் இவற்றால் இக்கவிராயர்களின் மிதிலைப்பட்டி தமிழ்ப்பண்ணை என்று புகழ்பெற்றது.




ஆலயங்கள் அமைத்தல், மண்டபங்கள் அமைத்தல், ஊருணி வெட்டுதல், கோவில் பூசைக்கு நிவந்தங்கள் விடுத்தல், அன்னதானம், அறப்பணிகள் என்று இவர்களின் சமயப் பணிகள் நீளும்.

பல்கலைப் புலமை, இசை, மருத்துவம், சோதிடம் ஆகிய பலதுறைகளும் கவிராயர்களின் பணிக்களங்களாகும்.

கவிராயர்களின் சமகாலப்புலவர்கள், புரவலர்கள், குறுநில மன்னர்கள், பாடல் தலைவர்கள் பற்றிய வரலாற்றுப் பதிவாகவும் இந்நூல் திகழ்கிறது.

தமிழக வரலாற்றில் அதிகம் அறியப்படாத ஒரு காலத்தைப் பற்றி அறியப்படாத ஊர்ப்பகுதி பற்றி, இதுவரை யாரும் இறங்காத ஆழத்திற்கு இறங்கிப் போய், சுவடி ஆய்வு, களப்பணி, நேர்காணல்கள் ஆகிய தரவுகள் மூலம் நிறையத் தகவல்களைச் சேகரித்து, முறையான கட்டமைப்புடன் படிக்க எளிதான அமைப்பு முறையுடன் எழுதப்பட்ட நன்னூல் இது.

♦ ♦ ♦ ♦

## 13/10/2011, சகோதரி நிவேதிதை இறைவனடி சேர்ந்ததன் நூற்றாண்டு அஞ்சலி

# சகோதரி நிவேதிதை

திருமதி வி. ஜானகி புஷ்பம்

*பாரதத்தின் கலைவண்ணம் உன் சொல்வண்ணத்தில் ஒளிர்கின்றதே!*

புராதன இந்தியக் கலைகளைப் புதுப்பிக்க வேண்டும் என்பதில் நிவேதிதைக்கு மிகுந்த ஆவல். "இந்த நாட்டின் தேசீயக்கலைக்குப் புத்துயிர் அளிக்க வேண்டும் என்பது என் நெடுநாளைய இனிய கனவு. தான் இழந்த பண்டையக் கலைகளை மீண்டும் பெறும்போது, அது வலிமை மிக்க நாடாகத் திகழும்", என்று நிவேதிதை தன் தோழிக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டாள். இந்தியக் கலைஞர்கள் பிறவி மேதைகளாக இருந்தும் ஓவியத்தில் மேனாட்டுப் பாணியைப் பின்பற்றுவது குறித்து அவள் வேதனைப்பட்டாள். இந்திய ஓவியர்களைச் சந்தித்து, அவர்களிடம் நீங்கள் இந்திய வாழ்க்கையைச் சித்தரிக்கும் படங்களையே வரைய வேண்டும். ஓவியங்கள் வரைய இந்திய நாட்டில் கருத்துக்களுக்கா பஞ்சம்? ஸ்ரீராமபிரான், சிவபெருமான், புத்தபகவான், பீஷ்மர், யுதிஷ்டிரர், சத்ரபதி சிவாஜி, ராணாபிரதாப்சிங் முதலானோரின் படங்களை அழகான ஓவியங்களாகத் தீட்டலாமே? இந்தப் படங்கள் இந்திய உணர்வைத் தட்டி எழுப்பும். இந்தியா எப்பேர்ப்பட்ட நாடு என்பதை உலகறியச் செய்யும், என்று அவள் உணர்ச்சி ததும்பக் கூறினாள்.



ரவீந்திரநாத் தாகூரின் குடும்ப நிகழ்ச்சிக்காக அவரது வீட்டிற்கு நிவேதிதை சென்றபோது, அங்கு அபனீந்தரநாத் தாகூரையும் அவருடைய மாணவர்களான நந்தலால் போஸ், அஸித்ஹல் தான் முதலான பிரபல ஓவியர்களைச் சந்தித்தாள். ரவீந்திரநாத்தாகூர் நிவேதிதையை அவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார். நிவேதிதை அந்த ஓவியர்களிடம் ஓவியக் கலைபற்றி சிறிது நேரம் உரையாடி விட்டு "கல்கத்தா கலைப்பள்ளித் தலைவர் ஹேவல் என்பவரை நீங்கள் சந்தித்து இருக்கிறீர்களா?" என்று கேட்டாள். அவர்கள், "நாங்கள் இதுவரை சந்திக்கவில்லை" என்றார்கள். நிவேதிதை அந்த ஓவியர்களிடம், "நான் அவரை உங்களுக்கு அறிமுகம் செய்து வைக்கிறேன். அவர் ஒரு சிறந்த கலாரசிகர், அறிவுத்திறன்மிக்க கலாவிமர்சகர். அஜந்தா, எல்லோரா குகைகளில் உள்ள ஓவியங்களைப்பற்றி ஆச்சர்யத்துடனும் பெருமையுடனும் பேசுவார். வியத்தகு இக்கலைப் பொக்கிஷத்தை இந்தியாவில் பிரபலமாக்கியவர் ஆவார். நீங்கள் அஜந்தா, எல்லோரா குகைகளுக்குச் சென்றிருக்கிறீர்களா?" என்று கேட்டாள். அவர்கள், "நாங்கள் இதுவரை சென்றதில்லை", என்றார்கள். நீங்கள் பாரதத்தில் ஓவியக்கலைஞர்களாக இருந்து கொண்டு, பாரதத்தில் ஓவியக்கலைக்கு புகழ்பெற்ற அஜந்தா, எல்லோரா ஆகிய புகழ்பெற்ற இடங்களைப் பார்க்கவில்லையா? நம் முன்னோர்களின் முன்னாளைய கலைச்சிறப்பை நன்கு அறிந்து கொண்டால்தான் இன்றையக் கலையை நாம் நன்கு உருவாக்க முடியும். ஹேவலுக்குச் சொல்லி உங்கள் பயணத்திற்கு நான் ஏற்பாடு செய்கிறேன். நீங்கள் வரைந்து வைத்திருக்கும் ஓவியத்தைக் காட்டுங்கள். பார்க்கலாம்," என்றாள். அபனீந்திரநாத் தாகூர் தன்னிடமிருந்த ஓவியத்தை நிவேதிதையிடம் காட்டுகிறார். நிவேதிதை அந்த ஓவியத்தை வாங்கி, கலை நோக்குடன் உற்று நோக்குகிறாள். "இராமாயணக் காட்சியை ஓவியத்தில் நன்றாக வரைந்திருக்கிறீர்கள்" என்றாள். அவனீந்திரநாத்தாகூர் நிவேதிதையிடம், "இராமனைக் காட்டுக்கு அனுப்பிய பின், தசரதர் உயிர்துறக்குமுன் இருந்த நிலையைச் சித்தரித்து வரைந்து இருக்கிறேன்," என்றார். நிவேதிதை அவரிடம், "ஓவியம் நன்றாக அமைந்துள்ளது. அரண்மனையில் சோகம் கலந்த அமைதியைப் படத்தில் கூட உணரமுடிகிறது. ஆனால் ஒரு பொருத்தமின்மை தென்படுகிறது. கௌசல்யாதேவி தசரத சக்ரவர்த்தியின் பட்டமகிஷி. ஒரு நாட்டுக்கே ராணியாகத் திகழும் அவள் கையில் பனை ஓலை விசிறியைக் கொடுத்திருக்கிறீர்களே! அந்த எளிமை இங்கு பொருத்தமானதாகத் தெரியவில்லை. யானைத் தந்தத்தால் அல்லது மயில்பீலியால் ஆன விசிறிதான் கௌசல்யா தேவியின் கையில் பொருத்தமானதாக இருக்கும்," என்றாள். அவனீந்தரநாத்தாகூர் நிவேதிதையிடம், "சகோதரி நீங்கள் சொல்வது முற்றிலும் உண்மை. இந்தச்சிறிய விஷயயம் முன்பே எனக்குத் தோன்றாமல் போனது ஆச்சர்யமாக இருக்கிறது. நீங்கள் எவ்வளவு நுண்ணியதாகக் கவனிக்கிறீர்கள்," என்று கூறினார். நந்தலால் தான் வரைந்த ஓவியத்தை நிவேதிதையிடம் காட்டுகிறார். குடிகாரர்களான ஜகாய், மதாய் என்னும் சகோதரர்களை நித்தியானந்த தேவர் என்னும் பெரியார் மனம் மாறச் செய்தார். அதைத்தான் இந்த ஓவியத்தில் சித்தரித்துள்ளேன், என்றார். நிவேதிதை

அவரிடம், ''குடிகாரர்களின் முகபாவனை தத்ரூபமாக அமைந்துள்ளது. யாரையாவது முன் மாதிரியாக வைத்துக்கொண்டு வரைந்தீர்களா?'' என்று கேட்டாள். நந்தலால் நிவேதிதையிடம் ''கிரீஷ் சந்திர கோஷ் என்ற சிறந்த வங்க நாடக ஆசிரியர் குடிபோதைக்கு அடிமையாக இருந்தபோது, ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரால் ஆட்கொள்ளப்பட்டு, குடிப்பழக்கத்திலிருந்து விடுபட்டார். இந்தப்படத்தை வரையுமுன் அவரை நன்கு தியானம் செய்து மனக்கண்ணால் பார்த்துக் கொண்டேன். அதன் பிறகு தான் படத்தை வரைந்தேன்,'' என்றார். நிவேதிதை அவரிடம், ''அதனால்தான் ஓவியம் இவ்வளவு சிறப்பாக அமைந்து உள்ளது. கருத்தையும் காட்சியையும் நன்கு தியானம் செய்து ஒருமைப்படுத்திக் கொண்ட பின்னரே அதற்குக் கலை என்னும் வெளிப்பாடு கொடுப்பது என்பது சிறந்ததொரு கலை நுட்பம். பாரதக்கலைஞரிடம் தான் இந்தப் பாரம்பரியத்தைக் காண முடியும். ஒருமுகப்படுத்தப்பட்ட மனதை உன்னத நிலைக்கு எடுத்துச் செல்லுங்கள். பின் கலையாக வெளிப்படுத்துங்கள். பரந்த இந்தப் பாரததேசத்தை உங்கள் கலையின் கருவாக எடுத்துக் கொள்ளுங்கள். பாரதத்தாயின் பெருமையும் சிறப்புக்களும் உங்கள் கலைக்கு உயிரூட்டட்டும்,'' என்றாள். அபனீந்தரநாத்தாகூர் நிவேதிதையிடம், உங்களின் ஊக்கம் ஊட்டும் சொற்கள் எங்களுக்கு உத்வேகம் அளிக்கின்றன. இந்திய உணர்வூட்டும் ஓவியங்களை வரைந்து நாங்கள் பாரதக் கலைக்கு புத்துயிர் ஊட்டுவோம், என்று உறுதி கூறினார்.

ஓவியம், சிற்பம், சித்திரம், கட்டிடம், இலக்கியம், அறிவியல் கலைஞர்களை நிவேதிதை சந்தித்து, அவர்களிடம் பாரத நாட்டின் கலைச்சிறப்புக்களை எடுத்துக்கூறி, அவர்கள் அதன் அடிப்படையிலேயே தங்கள் கலைத் திறமைகளை வெளிப்படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொண்டாள். நிவேதிதையின் சொல் வண்மையால் வங்காள நுண்கலை மறுமலர்ச்சி பெற்றது. பாரத நாட்டில் உற்பத்தியாகும் அனைத்துப் பொருட்களும் நிவேதிதையின் பாராட்டைப் பெற்றன. தம் சொந்தத் தேசீய பாரம்பரியத்தை பாரதீயர்களுக்கு விளக்கிக்கூறும் நோக்கத்துடன் அவள் நூல்களை எழுதினாள். உருவ வழிபாடு, சமய தேசீயத்திருவிழாக்கள், ஏனைய புண்ணிய நாட்களின் சிறப்புக்களை மக்களுக்குத்தன் சொல்வண்மையால் விளக்கினாள். இதிகாசங்கள், புராணங்களின் பெருமைகளை வெளிக் கொணர்ந்தாள். நம் வேதங்களின் தனித்தன்மையை அவள் சுட்டிக்காட்டினாள். அவசியமில்லாமல் வெட்கப்பட்ட இழிநிலையை அகற்றி, விலை மதிப்பற்ற அப்பொக்கிஷங்களைப் பாரத நாட்டு மக்கள் கற்றுப் பெருமிதம் கொள்ள வேண்டுமெனவும் அவள் உணர்த்தினாள்.

நிவேதிதை கண்ட மற்றொரு கனவு இந்தியாவில் அறிவியல் முன்னேற்றத்தை உண்டாக்குவது. பிறநாடுகளுடன் இந்தியாவும் அறிவியல் துறையில் சமநடை போட வேண்டும் என்று அவள் விரும்பினாள். பிரபல விஞ்ஞானியாகிய ஜகதீச சந்திரபோஸ் அவளுக்கு உற்ற நண்பர். ஜகதீச சந்திரபோஸ் அவர்கள் அறிவியல் துறையில் தாவரங்களுக்கு உயிர் உண்டு என்ற

உண்மையைக் கண்டறிந்தார். பிரான்ஸ் நாட்டில் அவருக்கு உயரிய விருதுகள் வழங்கிப் பாராட்டினார்கள். ஆனால் ஆங்கில அரசாங்கம் போஸின் ஆராய்ச்சி முடிவுகளை ஏற்றுக் கொள்ளவில்லை. அப்போது இந்தியா ஆங்கில அரசுக்கு அடிமையாக இருந்தது. எனவே ஆங்கில அரசாங்கத்துடன் போராடியே போஸ் தனது ஆராய்ச்சி முடிவுகளை வெளியிட வேண்டியதிருந்தது. இந்த முயற்சியில் நிவேதிதை போஸிற்கு பேருதவி புரிந்தாள். பத்திரிகைகளில் போஸின் அறிவியல் கட்டுரைகளைப் பிரசுரிக்க ஏற்பாடு செய்தாள். விஞ்ஞானிகள் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்து போஸின் ஆராய்ச்சி முடிவுகளை பரிசோதனை மூலம் விளக்கிக் கூற ஏற்பாடு செய்தாள். நிவேதிதையின் உதவியின் மூலம், போஸ் **தாவரங்களின் உணர்ச்சி** என்ற நூலையும் இன்னும் பல அறிவியல் உண்மை நூல்களையும் வெளியிட முடிந்தது. டாக்டர் ஜகதீச சந்திர போஸும் அவரது மனைவியும் நிவேதிதைக்கு நெருங்கிய நண்பர்களாயினர். போஸ் ஒரு அறிவியல் ஆராய்ச்சிக்கூடத்தை நிறுவுவதற்கு நிவேதிதை ஊக்கமும் உற்சாகமும் அளித்தார். அந்த ஆராய்ச்சிக்கூடம் 1917 வரையில் தொடங்கப்படவில்லை. எனினும் நிவேதிதை செய்த உதவிகளை போஸ் மறக்காமல் துவக்க விழாவில் குறிப்பிட்டு நிவேதிதையைப் பாராட்டி போஸ் நன்றி தெரிவித்தார். அந்த ஆராய்ச்சிக் கூடத்தில் நிவேதிதையின் நினைவாக, கையில் விளக்கேந்திய பெண் ஒருத்தி முன்னேறும் நிலையிலுள்ள உருவச்சிலையொன்றை அமைத்தார். போஸின் ஆராய்ச்சி முடிவுகளை ஆங்கிலேயர்கள் ஒப்புக் கொள்ளும்படிச் செய்து, பாரதத்தின் அறிவியல் அறிவை உலகறியச் செய்த பெருமை நிவேதிதையைச் சாரும். குடத்திலிட்ட விளக்கை குன்றினில் ஏற்றிய விளக்காக போஸின் அறிவியல் உண்மைகளை உலகிற்கு ஒளிரச் செய்தது நிவேதிதையின் சொல்வண்மையும் செயல் வண்மையும் ஆகும். அறிவியல், ஓவியம், இலக்கியம் ஆகிய அனைத்து பாரதக் கலைகளும் நிவேதிதையின் சொல் வண்ணத்திலும் செயல் வண்ணத்திலும் ஒளிர்ந்தன.

## ஆறுமுகப்பட்டியில் ஆண்டுவிழா

ஆறுமுகப்பட்டி (நெல்லை) பாலர்பள்ளியில் ஆண்டு விழாவையும் சுவாமி விவேகானந்தர் விழாவையும் இணைத்து திருமதி கே. முத்துக்கவிதாவும் எஸ். லட்சுமிரேவதியும் அழகுற நடத்தினர். கூட்டத்தில் 200 க்கும் மேல் சமய வகுப்பு, பாலர்பள்ளி, குழந்தைகளும் பெற்றோர்களும் பங்கேற்றனர். சிறப்புரை திருமதி ஜானகி புஷ்பம், திரு அருணாசலம், திரு சுப்பிரமணியம் குழந்தைகளின் பல்சுவை நிகழ்ச்சிகள் கோஷங்கள், பரிசுகள் ஏராளம், தாராளம்.

## கருவந்தாவில் கவினுறு விழா

நெல்லை மாவட்டம் கருவந்தா பாலர்பள்ளியில் பாலசேவிகாக்கள் ஏ. மாரிசெல்வமும், பி. நந்தினியும் நடத்திய விவேகானந்த விழாவில் திரு ஐயப்பனும், திரு கருப்பசாமியும் சிறப்புரை ஆற்றினர். குழந்தைகள் நடத்திக் காண்பித்த 16 கலை நிகழ்ச்சிகளில் நாடகம், பாடல், நடனம் சுவாமிஜியின் பொன்மொழிகள் இடம் பெற்றன. திரு பால்துரை வாழ்த்துரை வழங்கினார்.

♦ ♦ ♦ ♦

# இந்த மாமாவைக் குழந்தைகட்குப் பிடிக்கும்

## அனந்தபை கண்ட சரித்திரத் திருப்புமுனை

மெக்காலே கல்விமுறையில் நன்கு படித்த இளைஞர்களும் முதியவர்களும் 5 தலைமுறைகள் பாரதநாட்டின் இதிகாசம், புராணம், வீரர் வரலாறு, பண்பாடு இவற்றைப்பற்றித் தங்கள் பள்ளிப் பாடத்தின் மூலம் அறிந்து கொள்ளாமலே வளர்ந்து வந்தனர். ஒரு மத்திய கேபினட் அமைச்சர் கட்சி மாறிய போது ஒருவர் ''அவர் விபீஷணன் போல் பணி செய்த விட்டார்'' என்று குறிப்பிட்டார். ஒரு பிரதமர் ''விபீஷணனா அது யார்?'' என்று கேட்டாராம். நாட்டின் நிலைமை அந்த லட்சணத்தில் இருந்தது.



அந்தக்காலக் கட்டத்தில் வந்தவர் தான் திரு அனந்த பை. அமர்சித்திரக் கதா என்ற சித்திரப்பட காமிக்களின் தந்தை. பெற்றோர்களை விட, குழந்தைகட்கு பாரதம், பாரத தர்மம், பண்பாடு பற்றி அதிகம் தெரியும் என்று கற்பித்தவர். குழந்தைகளுடன் போட்டி போட்டுக் கொண்டு பெற்றோரும் அமர்சித்திரக்கதா படிக்க வைத்தவர் எந்த வினாடிவினா போட்டி எங்கு நடந்தாலும் அமர்சித்திரக்கதா வாசகர் பெறுவார் கூட்டத்தில் முதலிடம் என்று வரலாற்றின் நீரோட்டத்தை எதிர்த்திசையில் செலுத்தியவர்.

இந்த காமிக் புத்தகங்கள் ஆன்மீக சக்தியைப் பரப்பின என்கிறார் அமெரிக்க ஆராய்ச்சியாளர் பேராசிரியை கார்லைன் மக்லெயின்.

400க்கும் மேற்பட்ட தலைப்புக்களில் 10 கோடி புத்தகங்கள் காமிக்ஸ் ஆக வந்திருக்கின்றன. அவருடைய கிருஷ்ணா காமிக்ஸ் மட்டும் அறுபது பதிப்புக்கள் வெளிவந்திருக்கின்றன.

கெமிக்கல் இஞ்சினீயரான அனந்த பை, ஒரு விநாடிவினா நிகழ்ச்சியில் ராமனின் தாயார் பெயர் தெரியாத ஒரு டில்லிக் கல்லூரி மாணவனுக்கு கிரேக்க தேவதையின் பெயர் தெரிந்திருந்ததைப் பார்த்தார். அந்த அறியாமையைக் கண்டு எழுந்த வேகத்தில் பிறந்தது தான் கிருஷ்ணர் கதை. முதலில் கிருஷ்ணரின் மாயாஜாலங்கள் அற்புதங்கள் இவற்றை ஒதுக்கி வைத்துவிட்டு பகுத்தறிவாளர் பார்வையுடன் தான் கிருஷ்ணர் கதை வெளிவந்தது. பிறகு தான்அனந்தபை புரிந்து கொண்டார். நம் இதிகாச புராணங்களின் கவர்ச்சியே அவற்றின் அற்புதங்கள், அதீதங்கள், அதிசயங்களில் தான் இருக்கிறது என்பதை. பிறகு வந்த பதிப்புக்களிலும் புது நூல்களிலும் பழைய கதைகளை உள்ளது உள்ளபடி போட்டார் அனந்தபை. புராணக்கதைகள், ஜாதகக் கதைகள், தேசபக்தர் கதைகள், நாட்டுப்புறக்கதைகள், தெனாலிராமன் கதைகள், சேரசோழர் பாண்டியர் கதைகள் மூலம் பாரதப்பண்பாட்டினை முழுமையாக அழகியபடங்களுடன் எளிய வாசகங்களுடன், நாடகத்தன்மையுடன் குழந்தைகளுக்கு முன் வைத்தார் பை. தொலைக்காட்சி என்ற போட்டி ஊடகத்தால் கூட அமர்சித்திரக்கதாவின் ஒளியை மங்க வைக்க முடியவில்லை. கிருஷ்ணர் கதை, ராமாயணம் ஆகியவை சொகுசுப் பதிப்புக்களாகவும் பிரசுரமாயின. குழந்தைகள், ஆசிரியர்கள், இளைஞர்கள் பேராசிரியர்கள், நீயூயார்க் முதலாளிகள் என்று அனந்தபையின் நூல்களை ஆவலுடன் வாங்குபவர்கள் அனேகம் கோடி!

ஒரு எண்ணம், ஒரு சிந்தனையின் உரிய காலம் வந்து விட்டால் அதனை யாரும் தடுக்க முடியாது என்பார்கள். பாரதப்பண்பாட்டுக் கதைகளின் காலம் அனந்தபையின் மூலம் வந்தது. அவருடைய நூல்கள் வெளிநாடு சென்றன. ஆராய்ச்சி செய்து அவற்றைப் பற்றி குண்டு குண்டாக பி.எச்.டி. ஆய்வு அறிக்கை படைத்தார்கள் மேற்கு நாட்டு அறிஞர்கள். பாரதப்பண்பாட்டின் வளத்தை இக்கதைகள் மூலம் அறிந்து கொண்டோம் என்றார்கள் பேராசிரியர்கள்.

சில அழுமூஞ்சிகள் இதெல்லாம் வறட்டு ஹிந்துப் பிரச்சாரம். இளம் மூளைகளைச் சலவை செய்யும் சதி என்றனர். அனந்தபையோ சர்.சி.வி. ராமனைப் போல, ஜே.ஸி. போஸ் போல, ராமனும் கிருஷ்ணனும் நம் தேசீயச் சின்னங்கள் என்பதைத் தயக்கமின்றி மக்களுக்குணர வைத்தார்.

இப்பணியில் அவருக்கு உறுதுணை இந்தியா புக் ஹவுஸ் பதிப்பாளர் எச்.ஜி. மீர்ச்சந்தானி. சக்தியும் ஆழமும் கொண்ட எழுத்து, நல்ல தெளிவான படங்கள், ஆழமான ஆராய்ச்சி, எல்லாவற்றிற்கும் மேலாக பாரத நாட்டுக் குழந்தைகளின் மீது அளவற்ற பிரியம் எல்லாம் சேர்த்து அமர்சித்திரக் கதாக்களை அமர இலக்கியமாக்கி விட்டன. பாரத மக்களின் இதயத்தை மனத்தை, புரிந்து கொள்ள இக்கதைகள் உதவும் என்றார் ஒரு பேராசிரியர். பை மாமாவே நேரில் போய் கதை சொல்வதும் உண்டு. குழந்தைப் பத்திரிக்கையும் நடத்தியது உண்டு.

புள்ளி விவரங்கள், புகழ்மாலைகள், பிற மொழிகளில் மொழிபெயர்ப்பு 400 தலைப்புக்கள், இவையாவுமே, மாமா அனந்தபை, குழந்தைகளின் வாழ்வில் கொண்டு வந்த மகிழ்ச்சியை அளவிட்டுக் கூறப் போதுமானவை அல்ல! அண்மையில் அவர் காலமானபோது, பிஞ்சு நெஞ்சங்கள் உண்மையில் அழுதன.

# அலையும் துறவி

ஆர். சி. தாணு

226) 31-05-1893
கேத்ரி திவான் ஜகன் மோகன்லால்
ஜெகத்தில் ஜெயம் கொள்ளப் போகும்
ஜெகனை அமெரிக்கா
அனுப்ப பம்பாய் விரைந்தார்.
பொதுவாகப் பரபரக்கும்
பம்பாய் பட்டொளி வீசி பறந்தது.
சிகாகோ சென்றடைந்தார்
சிக்கனத்தில் வாழலானார்
மகானின் மகிமை உணர்ந்த
மாது ஒருத்தி மனைக்கு அழைத்தார்.
அறிஞர் பலர் அங்கு கூடினர்
விவேகானந்தரின் வீரியம் கண்டு
விழித்தெழுந்தனர். பல்கலை கழகப்
பேராசிரியர்கள் பண்டிதன்
பராக்கிரமம் கண்டு பணிந்து
போற்றினார் ஹார்வெர்டை
பார்வெர்ட் ஆக்கிய பாஸ் வேர்ட்
ஜி.எச். ரைட்
இளைய இந்தியத் துறவியின்
இத்துணை பெருமை யுணர்ந்து
இனிது அரங்கேற்ற
இச்சை கொண்டார்.
அறிமுகக் கடிதம் ஒன்றை
அவசரமாய் எழுதி நாட வேண்டிய
நண்பரின் முகவரியை
முழுதாய்த் தந்தார்.
சிகாகோ சென்ற சிந்தனைச் சிற்பி
சிந்தனை ஒட்டமதாய்
முடிந்து வைத்த முகவரியை
முற்றிலும் தொலைத்தார்.
சுவாமியின் சோக நிலைக்கு
மேகங்கள் அழுதன.
பனியாய் மேகங்களின் கருணை
தேகத்தை வாட்டி வதைத்தது.
ஜாதிக்காய்ப் பெட்டிக்குள்
இரவை கழித்தார்.
காலை விடிந்தது. சுவாமிஜியின்
கவலைகள்தான் விடியவில்லை.
பசி வாட்டியது.
கால்கள் நடை மறந்தன.
சிரமப்பட்டு சிறிது
தூரம் சென்றவர்
எதிர்ப்பட்ட வீட்டின் விளிம்பில்
வியர்த்திருந்தார்.
வெளியே விளைந்த வெளிச்சத்தைக்
காண வெள்ளைப் பெண்மணி
வேகமாய் விரைந்தாள்.
மயங்கிக் கிடந்தவர் மாநாட்டுப் பிரதிநிதி
என்றறிந்து உணவு ஊட்டினார்.
பாரதப் பிரதிநிதியாய்
பாதம் வைத்தவர்
பாருக்கே பிரதிநிதியாய்
பிரகாசிப்பார் என்று பார்வையால்
புரிந்து கொண்டார்.
தளர்ந்து போனவரைத் தாங்கி
சேயாகப் பேணியவர்
திருமதி ஹேல்.
தாங்கியவர் தளரா வண்ணம்
தாய் என சுவாமி அழைத்தார்.
தளர்ச்சிகள் தவிடு பொடியாயின.
மகிழ்ச்சிகள் கரை புரண்டோடின.
அமெரிக்க நாட்களில்
அன்னார் அதிகம் அமர்ந்தது
அம்மையாரின்
வீட்டினில்தான்.

# நோயில்லா வாழ்வில் உடலில் இயற்கை வேகங்களின் பங்கு

டாக்டர் வே. கணபதி எம்.டி – சித்தா

**பசி எனும் தீவன வேட்கையும், தாகம் எனும் நீர் வேட்கையும்:**

நம்முடைய ஜீவனுக்கு ஆதாரமாக, பசியையும், தாகத்தையும் குறிப்பிடும் சித்தர் பெருமக்கள் இவ்விரண்டும் சீர்கேடு அடையும் போது ஏற்படும் பிணிகளை, கீழ்க்கண்டவாறு பட்டியலிடுகின்றனர்.

''தீவனத் தடைகள் செய்யில் தேகமே யங்கபங்கம்
மேவுறுஞ் சூலை பிரமை மிக்குடலிளைப்புண்டாகும்
தாவுறு முகவே வாடிச் சந்துகள் நோதல் செய்யும்
சீவனக்கினி யாதாரம் தேர்முனி யுரைத்ததாமே''

என்று அவர் கூறுகிறார்.

தேர் எனும் சித்தர் 'பசியே' பல பிணிகளுக்கும் துணைக்காரணம் என்பதை ''நோயினுற்பத்திகேள் நோன்மை கூர் மைந்தனே!
நோனாமையால் வெகுளி நோனாத பசியால்'' என்று கூறியுள்ளதை நாம் அறிதல் வேண்டும்.

**பசியையும், தாகத்தையும் பற்றி அறிந்து கொள்ள, வேண்டுவன:**

1. அன்னாசயத்திலிருந்து வெளிப்படும் பசி எனும் உணர்ச்சியை உணவாதிகளால் தணிக்கவில்லை என்றால் தானே மரத்துத் தணியும் இயல்புடையது. இதனால் அழகு, ஆண்மை உள்ளிட்ட அனைத்தும் குறையும்.



2. பட்டினியாய் இருந்து அதிகப் பசியிலிருக்கும் போது கடின உணவுகளையும் உஷ்ண உணவுகளையும், அதிக நெய்ப்புள்ள எண்ணெய் நெய் வகைகளை உண்ணாமல் குறைந்தளவு இலகு உணவுகளையே உண்ண வேண்டும்.

3. “உண்பதிருபொழுது ஒழிய மூன்று பொழுதுண்ணோம்” என்ற மருத்துவப் பழமொழியை மனதில் கொண்டு முடிந்தால் சூரியன் இளம் பருவ உதயம் முதல் 1½ -2 மணிக்குள் (8 முதல் 8.30) காலை உணவையும், சூரியனின் காளைப் பருவமான மதியம் 12-1 மணிக்குள் மதிய உணவையும், தேவைப்பட்டால் இரவு உணவு, சூரியனின் மூப்புப் பருவமான இரவு 7-8 மணிக்குள் உணவு உண்பது பசி எனும் சமானாக்கினிக்கு நல்லது.

4. அதிகப் பசி நிலையில், சினம், மனம் துயர்வுறல் நிலையில் உணவு நிலையை தவிர்க்கவும்.

5. உணவு உண்ணும்போது முதலில் இனிப்புப் பொருட்களை இடையில் புளிப்பு, உப்பு, கார்ப்புச்சுவை உணவுகளையும், இறுதியில் துவர்ப்புப் பொருட்கள், புளிப்பு தயிர்ச்சுவை உணவுகளையும் உண்ணல் நல்லது.

6. முக்கால் வயிறு உணவு உண்பது மிக நல்லது. மிகு உணவு பசியைச் சீரழிக்கும்.

7. செந்நீர் குறைவுபட்டிருப்பதை உணர்த்தும் உணர்ச்சி நீர்வேட்கை ஆகும். நீர்வேட்கை (அ) தாகம் என்பது நீரை மட்டும் குடித்தல் என்பது ஆகாது. உண்ணுகிற ஒவ்வொரு உணவுவகைகளுக்கு ஏற்ற நீர்வகைகள் பருகி அதனதன் நீர்வேட்கையைக் குறைக்க வேண்டும் என்பதே முன்னோர்களின் இயல்பு. உதாரணமாக,

கோதுமை உணவுக்குத்தாகமாக – தயிர், சில அரிட்டங்கள்

நச்சுப்பொருட்கள், தேன் இதற்கு – நீர்

மாப்பண்டங்களுககு – வெந்நீர்

கீரைகள், பயறு உணவுகள், மோர், காடி ஆகிய நீர்வகைகளை உண்ணல் வேண்டும்.

8. பருகும் நீரானது உணவின் பண்பிற்கு நேர் எதிரிடைத் தன்மையுள்ளதாகவும், நீரின் தன்மைக்கு முரண்படாததுமாக இருத்தல் வேண்டும் என்பது நீரின் இலக்கணமாகும்.

9. பாடும்போது, பேசும்போது, பிரசங்க நிகழ்வின் போது அதிக நீர் பருகல் நல்லதல்ல. உணவுக்கு முன் நீர் பருகல் தவறாகும்.

10. எங்ஙனம் உணவுக்குத் தகுந்தவாறு தாகம் தீர்க்கும் நீர்வகைகள் இருப்பது போன்று நோய்களுக்குத் தக்கவாறும் நீர்வகைகள் உள்ளன. நீர் வேட்கை நிலையில் அந்தந்த நோய்க்குத்தக்கபடி பருகுதல் நல்லது.

உதாரணமாக, இளைத்தவர்கள் – அரிஷ்ட வகைகள்
பருத்த உடலினர் – நீர் கலந்த தேன்
இளைப்பு நோயால் பாதித்தவர் – இறைச்சிகளின் ரசம்
மிகு பேச்சு, பட்டினி, வெயில், உடல் வாட்டம் – பால்
ஆகிய நீர் வகைகளையும்
கண்நோய், காசம், மேகம், தொண்டைப்பிணி
– சூடு ஆறிய வெந்நீர்

ஆகியனவும் நீர்வேட்கை தீர்க்க இவ்வகை நீர்வகைகளையும் கருத்திற் கொள்ள வேண்டும்.

11. நீரின் வகைகள் பற்றிக் கூற வேண்டுமானால் குறைந்தது நூற்றுக்கணக்கான பக்கங்கள் எழுதலாம். ஆற்று நீரில் ஆரம்பித்து சுனை நீர் வரைக்கும், ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு குண நலன்கள் உண்டு.

12. நீர் தாகத்தை மாற்றும் குணமுடைய அற்புதச் சக்தி கொண்ட மூலிகைகள் நம்முடனே உள்ளன. அவை, நெல்லிக்காய், எலுமிச்சை, நெற்பொரி, உலர்திராட்சை, சந்தனம், பனங்கற்கண்டு, வெட்டிவேர், குருவேர் எனும் விலாமிச்சம் வேர் போன்ற பல உள்ளன. இவை நீர் வேட்கையைக் கட்டுப்பாட்டுக்குள் வைக்கும் திறனுடையவை. (உடலுக்கு தீங்கு விளைவிக்காமல்)

13. அதே போல பசி எனும் தீவன வேட்கையை மாற்றும் குணமுடைய அற்புத மூலிகைகள் நம்மிடம் உள்ளது. அவை நத்தைச்சூரி, நாயுருவி விதை, கடுக்காய், மாசிக்காய், நீர் முள்ளி விதை, ஆல்விழுது, சில வகை பிரண்டைகள் எனப் பலவாம். இவைகள் உடலுக்கு தீங்கு விளைவிக்காமல் பசி உணர்வை தற்காலிகமாக நீக்கக் கூடியவை.

மேற்கூறிய மூலிகைகள் பல சித்தர்களின் அஷ்ட கருமச் செயலுக்கு ஆதாரமாகக் கூறப்பட்டுள்ளன.

இங்ஙனம் பல்வேறு நற்குணங்களுக்கு ஆதாரமான பசி, தாகம் எனும் உணர்வுகளை மதித்து நம்மை நாம் காப்போமாக. அந்த இயற்கை வேகத்தை வணங்குவோமாக.

## அடைச்சாணியில் ஆளுமை வளர்ச்சி முகாம்

கோடை விடுமுறையில் வெயிலில் குழந்தைகள் திரியாமல் அடைச்சாணி (நெல்லை) பாலர்பள்ளியினர் நடத்திய ஆளுமை வளர்ச்சி முகாமில் இரண்டு நாட்கள் 25 குழந்தைகள் பயிற்சி பெற்றனர். பஜனைப்பாடல்கள், பாரதப்பண்பாடு பற்றிய உரை, கதைகள், யோகா, தேசப்பக்திப்பாடல்கள், நாடகப்பயிற்சி, கைவேலைப்பயிற்சி இவை இடம் பெற்றன. உள்ளூர் மக்களின் ஆதரவு உள்ளத்தைத் தொட்டது.

நிகழ்ச்சி ஏற்பாடு திருமதி ஜானகி புஷ்பமும், சி. சரஸ்வதியும்.

♦ ♦ ♦ ♦

# கேந்திர நிறுவனர் மா. ஏக்நாத்ஜியின் புனித வாழ்க்கை வரலாறு

## ஏக்நாத்ஜி

**ஆங்கிலம் : நிவேதிதா ரகுநாத் பிடே**
**தமிழ்: பொ. தங்கசுவாமி**




ஏக்நாத்ஜி நோய்வாய்ப்பட்டிருந்தபோதும், பிணி நீங்கியபின் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தபோதும் அவரை மிக அருகாமையிலிருந்து பார்க்கும் வாய்ப்பை பெற்றவர்கள், அவர் லட்சியத்தோடு முழுமையாக ஐக்கியமாகி இருந்த தன்மையைக் கண்டு முற்றிலுமாக வியந்து போயினர். 'நான்' என்பது அவருள் கிஞ்சித்தும் இல்லாமல் போய்விட்டது. அவருடைய உடல், மனம், ஆற்றல் அத்தனையும் நாட்டிற்காகவும், லட்சியத்தோடும் ஒன்றாகிப் போயின. மனிதனும், குறிக்கோளும் ஒன்றாகிப் போயின. அந்நாட்களில் அவரை அருகாமையில் இருந்து பார்ப்பது வேதனை மிகுந்ததாகவும், அதே வேளையில் மகிழ்ச்சி நிறைந்ததாகவும் இருந்தது. நாட்டிற்காகவே வாழ்ந்த ஏக்நாத்ஜியால் வேறு எதையும் நினைத்துக்கூட பார்க்க முடியவில்லை. கொடுக்கப்பட்ட நேரத்திற்குள் அதிகபட்ச சக்தியை ஈடுபடுத்தி முயற்சிக்கும் கபடி விளையாட்டைப் போன்றது வாழ்க்கை என்று அவர் கருதினார். அதே போல் உடல் நலத்தை நினைவில் கொள்ளாமல் பொதுநலத்திற்கு மிகக்கூடுதலாகக் கொடுப்பதற்கு தன்னைத் தீவிரமாக ஈடுபடுத்திக் கொள்ள விரும்பினார். உடல்நிலை நன்றாகத் தேறிவிட்டது என்று உணர்ந்ததும், பணியையும், பெயர்களையும் நியாயமான அளவிற்கு ஞாபகத்தில் கொண்டுவர முடிந்ததும், பணியில் ஈடுபடப் போவதாக அவர் கூறினார்.

ஏக்நாத்ஜி எப்போதும் விழிப்போடு இருந்தார். பிணி நீங்கி ஓய்வெடுத்துக் கொண்டிருந்த காலகட்டத்திலும் கூட, பிறர் அறியும் முன்பே எந்தப் பிரச்சினையையும் அவரால் ஊகித்து உணர்ந்து கொள்ள முடிந்தது. அவர் கடமை தவறிய, தவறான வழியில் சென்ற பலரைத் திருத்தினார். எச்சரிக்கை செய்தார்.

ஓர் இடத்தில் இருந்து கொண்டே எப்படி அவரால் பிரச்சினையை, பிறர் அறிந்து கொள்ளும் முன்பே, கண்டு கொள்ள முடிந்தது என்பது வியப்படையச் செய்கிறது. ஏக்நாத்ஜி முழுமூச்சுடன் அல்லாமல், உதவிடும் வகையில் அவர் தன் பணியைத் தொடங்க வேண்டும் என்று உணர்ந்தார். அவருடைய டாக்டர் ஜுகல் கிஷோர் அவர்களும் ஏக்நாத்ஜி நிதானமாகப் பணி செய்ய ஆரம்பிக்க வேண்டும் என்ற கருத்தை வரவேற்றார். கன்னியாகுமரியில் ஜுலை 27-ம் நாள் நடக்கவிருக்கும் புதுவாழ்க்கை நெறி (தீட்சை) அளிக்கும் நிகழ்ச்சியில் ஏக்நாத்ஜி கலந்துகொள்வது அவருக்கு நன்மை பயக்கும் என்று டாக்டர் ஜுகல் கிஷோர் உணர்ந்தார். இருப்பினும், பொதுமக்கள் பணத்தைப் பற்றியும், அது எவ்வாறு செலவிடப்பட வேண்டும் என்பதில் ஏக்நாத்ஜி மிகவும் விழிப்புணர்வோடு இருந்தார். அவர் அவசர, அவசரமாகச் செல்லவேண்டும் என்ற நிலை இல்லாததாலும், பணி ஏதும் இல்லாததாலும் விமானக் கட்டணத்தில் பணத்தை வீணடிக்க வேண்டாம் என்று கூறி கன்னியாகுமரிக்கு ரயிலில் பயணம் செய்தார்.

அந்த நாட்களில் ஸ்தாபனத்தைச் சூழ்ந்திருந்த பல பிரச்சினைகளைப் பற்றி ஏக்நாத்ஜி கவலை கொண்டிருந்தார். ஜுலை 11-லிருந்து நிகழ்ந்து கொண்டிருக்கும் ஒரு பிரச்சினை பெண் தொண்டர்கள். நலம் விரும்பிகளும் இந்த பரீட்சார்த்தமான ஆண்களும், பெண்களும் சேர்ந்து பணிபுரிதலை நிறுத்திட விரும்பினார். ஆனால் ஏக்நாத்ஜி இது தொடர வேண்டும் என்று கருதினார். அவர் எப்போதும் தான் இருக்கப் போவதில்லை என்று கூறினார். அப்போதும்கூட அவருடைய எண்ணம் எல்லாம் ஸ்தாபனத்தைப் பற்றியதாக மட்டுமே இருந்தது என்பதை நாம் காண முடிந்தது. அவருக்குப்பின் ஸ்தாபனத்தில் பெண் ஆயுட்காலத் தொண்டர்கள் வெற்றடமாக உணராமல் இருக்க அவர் டாக்டர் லட்சுமி குமாரியை விவேகானந்த கேந்திரத்தில் சேருமாறு இசையச் செய்தார்.

முக்கியமாக நபர்களின் பெயர்கள் சம்பந்தமான ஞாபகசக்தி பாதிக்கப்பட்டிருந்தாலும் ஏகநாத்ஜியின் உள்ளுணர்வு மதிநுட்பம் எந்தவிதப் பாதிப்பின்றி முழுமையாக இருந்தது. வரும் நாட்களில் விவேகானந்தபுரம் வளாகத்திற்கு பாதுகாப்புப் பிரச்சினை ஏற்படலாம் என்றும் அதனால் வளாகத்தைச் சுற்றி நன்கு வேலி அமைக்க வேண்டும் என்றும் கூறினார். உண்மையிலேயே, ஒரு வருடத்திற்குள் அப்பகுதியில் கலவரங்கள் ஏற்பட்டன. ஒரு பிரிவினர் விவேகானந்தபுரத்தை தீயிட்டுக் கொளுத்த முயற்சித்தனர். ஒரு தடவை ஆகஸ்ட் 31-ம் தேதி டில்லியில் எல்லோரும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கும் போது நாட்டில் இரண்டு மூன்று ஆண்டுகளுக்குப் பின் சில சங்கடங்கள் நிகழும் என்றும் திருமதி இந்திராகாந்தி தான் அந்தக் கஷ்டத்தை அனுபவிக்கும் முக்கிய நபராக இருப்பார் என்று ஏக்நாத்ஜி கூறினார். 1984-ல் திருமதி இந்திராகாந்தி துப்பாக்கி குண்டிற்கு பலியானார். அங்கிருந்த கேந்திரத் தொண்டர்களைப் பற்றிய அவருடைய சில மதிப்பீடுகள் அப்போது நெருங்கியத் தொடர்பில்லாததைப் போன்று தோன்றினாலும் உண்மையிலேயே அவை அட்சரப்பிசகின்றி பின்னர் உண்மையென நிரூபணமடைந்தன.

**கர்மயோகி:** படகுத்துறை பிரச்சினையால் ஏக்நாத்ஜி அளவுக்குமீறி அதிகநேரம் வேலை செய்ய நேர்ந்தது. அதனால் அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டது. அவருடைய சுகவீனத்தின் போதும் அரசிடம் முறையிடுவதும், பேச்சுவார்த்தை நடத்துவதும் நடைபெற்று வந்தன. முடிவில் படகுப் போக்குவரத்தை தமிழ்நாடு அரசிடம் ஒப்படைப்பதற்கான ஒரு முடிவு எடுக்கப்பட்டது. இந்த முடிவை ஏக்நாத்ஜியிடம் தெரிவிக்கவும் இது சம்பந்தமான அவருடைய கருத்தைக் கேட்டறியவும் ஒரு தொண்டர்கள் குழு அவரைச் சந்திக்கச் சென்றது. அவர்களிடம் கழிந்த சில மாதங்களாகப் பிரச்சினை நிகழும் இடத்தில் அவர் இல்லாதிருப்பதால் அவர்கள் தான் நிலைமையை நன்றாகச் சீர்தூக்கிப் பார்த்து, தகுந்த முடிவு எடுக்கத் தகுதியானவர்கள் என்று மிகத் தெளிவாகக் கூறினார். அவருடைய ஒரே கவலை பாறை நினைவாலயத்தைக் காணவரும் யாத்திரிகளுக்கு எந்தவிதத் துன்பமும் நேரக்கூடாது என்பதே. மக்கள் சிரத்தையோடு பாறை நினைவாலயத்திற்குப் பணம் திரட்டி நன்கொடை அளித்ததை எப்போதும் ஏக்நாத்ஜி உணர்ந்திருந்தார். எனவே ஒருவர்கூட நினைவாலயத்தைப் பார்க்காமல் செல்லக்கூடாது என்பதற்காக எல்லா நாட்களிலும் படகுப் போக்குவரத்து நடைபெற வேண்டும் என்று அவர் விரும்பினார். அரசு படகுப் போக்குவரத்தை ஏற்று எடுத்தபின் வாரவிடுமுறை அளிக்க வாய்ப்பு உள்ளது. எனவே படகுப் போக்குவரத்தை ஒப்படைக்கும்போது வாரத்தில் எல்லா நாட்களும் படகுப் போக்குவரத்து நடைபெறும் என்பதை உறுதி செய்து கொள்ளவேண்டும் என்று அவர் விரும்பினார். இது தெளிவாக்கப்பட்டது.

நிச்சயிக்கப்பட்ட நாளில் படகுப் போக்குவரத்து அரசிடம் ஒப்படைக்கப்பட்டது. உற்சாகம் குன்றிய சில தொண்டர்கள் ஏக்நாத்ஜியும் மிகவும் சங்கடப்பட்டுக் கொண்டிருப்பார் என்று நினைத்து அவரைக் காண சென்றனர். ஒரு பெண் தொண்டரின் உற்சாகமிழந்த வாடிய முகத்தைப் பார்த்ததும் அவரிடம் ஏக்நாத்ஜி என்ன விஷயம் என்று கேட்டார். ‘‘படகுப் போக்குவரத்து நம்மிடம் இல்லை என்பதை நினைத்து மிகவும் வேதனைப்படுகிறேன்’’ ‘‘அதனால் என்ன, படகுப் போக்குவரத்தை வழக்கம் போல் ஒழுங்காக அரசு நடத்தும் என்று உறுதி அளித்துள்ளதால் நாம் ஏன் கவலை அடையவேண்டும்? பாறை நினைவாலயத்தையும் நாம் ஒரு நாள் ஒப்படைக்க வேண்டிய நிலைமை வந்தால், நாம் ஏன் வருத்தமடைய வேண்டும்? அவர்களும் நம்மவர் தான். எல்லோரும் நினைவாலயத்திற்காகப் பணி செய்துள்ளனர்.’’ தொண்டர் அவருடைய விருப்பு வெறுப்பற்ற தன்மையைக் கண்டு வாயடைத்துப் போனார்.

டாக்டர்களும் அதிசயிக்கும் வண்ணம் ஏக்நாத்ஜி விரைவில் குணமடையத் தொடங்கினார். பலருடைய பிரார்த்தனை பலன் கொடுத்தது. அவருக்கு இதயநோய் ஏற்பட்டபோது கல்கத்தாவில் டாக்டர் சுஜித் தர் ‘மஹாமிருத்துஞ்சய யாகம்’ ஒன்றை நடத்தினார். பின்பு ஏக்நாத்ஜி கல்கத்தா சென்றபோது யாகம் நடத்தியதை அறிந்து சிரித்துக்கொண்டே திருமதி மஹுவா தர்ரிடம் ‘‘உன்னுடைய யாகம் என்னை மீண்டும் இங்கு கொண்டு வந்து சேர்த்தது’’

என்று கூறினார். அவருடைய சொந்த விடாமுயற்சியும் பிரார்த்தனைகளுக்கு வலு சேர்த்தது. அவர் நாட்டின் புனர் நிர்மாணத்தில் உபயோகித்த மனஉறுதி இந்த அற்புதத்தை நிறைவேற்றிட மீண்டும் செயல்படுத்தப்பட்டது. அதனால் இளம் ஸ்தாபனத்தை, நாட்டை உருவாக்கும் பணியில் அவரால் ஸ்திரமான நிலையில் வைத்திட முடிந்தது. அவருடைய சக்தியை கொஞ்சம் கொஞ்சமாக அவர் பலப்படுத்திக் கொண்டார். தொடக்கத்தில் அவரால் கூடுதல் நேரம் நடக்க முடியாமல் இருந்தபோதும் கூட, தாங்கும் சக்தியை அதிகரிப்பதற்காக அறையினுள் சில அடிகளாவது தினசரி நடப்பார். படிப்படியாக, நடக்கும் நேரத்தைக் கூட்டி உடல்பலத்தையும் பலப்படுத்தினார். அவருடைய நினைவாற்றலும், படிப்படியாகத் திரும்பியது. மிகவும் அதிசயமாக, அவருடைய ஆரம்பகால நினைவு முதலில் பழைய நிலைக்குத் திரும்பியது. அதற்குப் பின்பு அவருடைய சமீபத்திய நாட்களின் நினைவுகள் திரும்பின. அவருடைய குழந்தைப் பருவம், சங்க வாழ்க்கை, அதற்குப்பின்பு நினைவாலயப்பணி முதலிய எல்லாவற்றையும் அவரால் நினைவு கூற முடிந்தது. இருப்பினும் சில மாதங்களுக்கு முன்பு நடந்தவற்றை அவரால் ஞாபகப்படுத்த முடியவில்லை. இந்த நினைவாற்றலையும் சில மாதங்களுக்குப்பின் அவர் பெற்றார். பிரம்மாண்டமான ஞாபகச் சக்தியை கொண்ட ஒருவர் இப்போது எவ்வாறு தொண்டர்களின் பெயர்களை ஞாபகப்படுத்திக் கொள்ள முடியவில்லை? கேந்திரத்திலும், சங்கத்திலும் உள்ள பலருக்கு இந்த உண்மையை ஒத்துக் கொள்வதற்கு மிகவும் கடினமாக இருந்தது.

(கட்டுரை தொடரும்)

## பெட்டிச் செய்தி

**ஸ்ரீ ஏக்நாத்ஜி** என்ற இந்த வாழ்க்கை வரலாற்று நூல் புத்தக வடிவில் **விவேகானந்த கேந்திரப் பிரகாசன் டிரஸ்ட், 5, சிங்கராச்சாரி தெரு, சென்னை – 600 005** என்ற முகவரியில் வெளியிடப்பட்டுள்ளது.

விலை **ரூ.** 70/-

# திருவிளக்குப் பூஜை ஒங்கிணைப்பாளர் கூட்டம்

கோவில்பட்டியில் 20-4-2011 அன்று நடந்த திருவிளக்குப்பூஜை ஒருங்கிணைப்பாளர் அமர்வில் 7 கிராமங்களில் இருந்து இருபத்தைந்து பேர் வந்து பங்கேற்றனர். நோக்கம், நெறிமுறை பயன்பாடு ஆகியவற்றில் பயிற்சி தரப்பட்டு விவாதிக்கப்பட்டது. முடுக்கு மீண்டான்பட்டி சகோதரி மங்களசுந்தரி திருவிளக்குப்பூஜைப் பயிற்சி அளித்தார். கோவில்பட்டியில் அடுத்த மாதம் வரும் 1008 திருவிளக்குப் பூஜையை எப்படி நடத்துவது என்பதும் தீர்மானிக்கப்பட்டது.

♦ ♦ ♦ ♦

# அன்புத் தொண்டர்களின் ஆன்மீகச் சுற்றுலா

## (புனிதவதி - அம்பை)

விவேகானந்த கேந்திரத்தின் தொண்டர்கள் மற்றும் ஆசிரியைகள் சேர்ந்து 15-03-2011 முதல் 18-03-2011 வரை ஆன்மீகச் சுற்றுலா சென்று வந்தோம். 15-03-2011 அன்று ஸ்ரீராம் பேருந்தில் திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்ட ஆசிரியைகள் மற்றும் தொண்டர்களும் சக்தி பேருந்தில் தூத்துக்குடி, விருதுநகர், ராம்நாடு மாவட்ட ஆசிரியைகளும் தொண்டர்களும் டாடாசுமோவில் பிற டிரைவர்களும் இருந்தனர். 21 ஆண் தொண்டர்களும் 76 பெண் தொண்டர்களும் 4 டிரைவர்களுடன் பயணம் இனிதே ஆரம்பமானது.

பேருந்து புறப்பட்டபோது கேந்திர சகோதர சகோதரிகளின் சுவாமி விவேகானந்தருக்கு ஜெய் என்ற முழக்கம் விண்ணைத் தொட்டது. மதுரையில் இரவு உணவை முடித்து விட்டு ஊட்டி நோக்கி பேருந்து புறப்பட்டது. பேருந்தில் இரவு பக்தி திரைப்படங்களைக் கண்டு மகிழ்ந்தோம்.

16-03-2011 அன்று காலை ஊட்டி வந்து சேர்ந்தோம். கொட்டும் பனியில் அனைவரும் நடுங்கி நின்றோம். சகோதரி வசந்தா அன்பழகன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்கள். குளிருக்கு இதமாக அனைவருக்கும் சுடச்சுட டீ கொடுத்தார்கள். நீண்ட வருடங்களுக்கு பிறகு அவர்களை சந்தித்ததில் அனைவரும் மகிழ்ச்சி கொண்டோம். பாலசரஸ்வதி வித்யாலயத்தில் காலைப்பிரார்த்தனை நடைப்பெற்றது. அதனை தொடர்ந்து சகோதரர் சுரேஷ் கண்ணன் நாம் அடுத்து எங்கு செல்கின்றோம். அங்கே முக்கியமாக நாம் பார்க்கும் இடங்களை பற்றியும் எடுத்துக் கூறினார். வசந்தா அக்கா வீட்டில் காலை உணவு சாப்பிட்டோம். அவர்கள் நடத்தி வரும் கோகுல் காப்பகத்தையும் சாரதா பெண்கள் மறுவாழ்வு காப்பகத்தையும் பார்வையிட்டோம்.

அங்கிருந்து கிளம்பி தொட்டபெட்டா வந்து சேர்ந்தோம். கீழிருந்து மலை மேலே உள்ள இடத்தை பார்க்க அங்கிருந்து ஜீப்பில் சென்றோம். தொட்டபெட்டாவில் டெலஸ்கோப் மையத்தைப் பார்த்தோம். அங்கிருந்து பார்த்தால் கீழேயிருப்பவையெல்லாம் நம் பக்கத்தில் இருப்பது போல் தோன்றியது. இந்தியாவிலேயே 2-வது பெரிய தேயிலைத் தொழிற்சாலையைப் பார்வையிட்டோம். அங்கு தேயிலை இலையிலிருந்து எவ்வாறு டீத்தூள் தயாரிக்கிறார்கள் என்பதைக்கண்டு அறிந்தோம். டீத்தூள் தயாரிக்கும் மெஷின்களை கண்டோம். பச்சைத்தேயிலை இலைகளை விரித்து அடியில் செயற்கை காற்று மூலம் அவைகளை உலர வைப்பதில் ஆரம்பித்து மீண்டும் அவை தரம் பிரிக்கப்பட்டு டீத்தூளாக வெளி வருவதையும் கண்டோம். அனைவரும் அவர்கள் கொடுத்த டீயை பருகினோம். டீத்தூளும் வாங்கிக் கொண்டு கிளம்பினோம்.

மதிய உணவை வசந்தா அக்கா ஏற்பாடு செய்திருந்தார்கள். மதிய உணவை உண்டு, அவர்களிடம் பிரியாவிடை பெற்று குன்னூர் சென்றோம். அங்கு தாவரத்தோட்டம் பொட்டானிக்கல் கார்டன் கண்டோம். கண்ணைக் கவரும் வண்ண வண்ணப்பூக்களைக் கண்டு மகிழ்ந்தோம். நம் தேசத்தை பூக்களால் வரைந்து வைத்திருந்தார்கள். யானை, மயில், தேசியக்கொடி ஆகியவற்றையும் மரங்களிலே வெட்டி வடிவமைத்திருந்தது அற்புதமாக இருந்தது. கல்மரம் பார்த்தோம். ரோஜா செடிகளை சகோதர சகோதரிகள் வாங்கி மகிழ்ந்தார்கள்.

பின் அங்கிருந்து கிளம்பி சோமனூருக்கு அருகில் தொட்டியபாளையத்தில் கணபதி கல்யாண மண்டபத்தில் இரவு உணவை உண்டு அங்கு இரவு தங்கினோம். சித்த வைத்தியர் பார்த்தசாரதி, திரு பரமசிவம் எஞ்சினியர், திரு முருகானந்தம் போன்றவர்கள் இரவு உணவை ஏற்பாடு செய்திருந்தார்கள்.

17-3-2011 அன்று காலை பிரார்த்தனைக்கு பின் சித்த வைத்தியர் பார்த்தசாரதி அவர்கள் கைகளை வேகமாக தட்டினால் நம் உடலுக்கும் மனதிற்கும் உற்சாகமும் சுறுசுறுப்பும் கிடைக்கும் என்றார். பின் சுரேஷ் கண்ணன் குருவாயூரில் இருக்கும் குழந்தையைப் பற்றியும், அவனின் அருளைப் பெறப்போவது பற்றியும் வெகு அருமையாக விளக்கம் தந்தார். பின் காலை உணவைப் பார்சலாக வாங்கிக் கொண்டு கிளம்பினோம்.

காலை உணவை திப்புசுல்தான் கோட்டையில் முடித்துவிட்டு குருவாயூருக்கு கிளம்பினோம். குருவாயூரில் நீண்ட வரிசையில் நின்று குறை தீர்க்கும் குருவாயூர் குழந்தையை தரிசனம் செய்தோம். அந்த நிமிடமே நம் குறையெல்லாம் தீர்ந்த சந்தோஷம் மனதில் தொற்றிக் கொண்டது.

குருவாயூரில் இருந்து விட்டு பிரியமனமில்லாமல் குருவாயூர் அப்பனை நினைத்துக்கொண்டே கிளம்பினோம். மாலை ஆதிசங்கரரின் பிறந்த பூமியான “காலடி” வந்து சேர்ந்தோம். ஆதிசங்கரர் மடத்தைச் சுற்றிப் பார்த்தோம். பூர்ணா நதியில் சகோதர சகோதரிகள் நீராடினார்கள். ஆதிசங்கரர் மடத்தில் அவருடைய பிறப்பு பற்றியும் முதலையிடம் அவர் மாட்டிக் கொண்டதையும் தீட்சை பெற்றதையும் படமாக வரைந்திருந்தார்கள். அதன் அருகில் உள்ள கிருஷ்ணன் கோயிலையும் கண்டு மகிழ்ந்தோம். மாலையில் காபி மற்றும் டிபன் சிருங்கேரி ஆதி சங்கர மட நிர்வாகி ஏற்பாடு செய்திருந்தார்கள். பின் அங்கிருந்து கிளம்பினோம்.

இரவு கொடுங்கல்லூர் வந்து சேர்ந்தோம். சகோதரி லெட்சுமி திதி அவர்களின் வேத ஆராய்ச்சி மையத்தில் தங்கி அவர்களின் ஆசியுரையைக் கேட்டு மகிழ்ந்தோம். 18-03-2011 அன்று காலை 3 மணியளவில் எழுந்த குளித்துவிட்டு 5 மணிக்கு திருவஞ்சிக்குளம் சிவன் கோவிலுக்கு சென்று இறைவனை தரிசித்தோம். இது சுந்தரர் பாடிய ஸ்தலம் ஆகும். 41 சிவலிங்கங்கள்

கோவிலுக்குள் இருந்தன. சிவலிங்கங்களை தரிசித்து விட்டு அங்கிருந்து கிளம்பி கண்ணகி கோவிலுக்குச் சென்று ஸ்ரீபகவதி அம்மனை தரிசித்துவிட்டு வந்தோம். லெட்சுமி திதியின் இல்லத்தில் காலை உணவை முடித்துக் கொண்டு அங்கிருந்து கிளம்பி எர்ணாகுளம் வந்தடைந்தோம்.

எர்ணாகுளத்தில் படகுசவாரி சென்றோம். படகுசவாரி செல்லும்போது சகோதரிகள் அனைவரும் ஆடிப்பாடி மகிழ்ந்தோம். 1 மணி நேரமும் படகுசவாரி எவ்வாறு கழிந்தது என்றே தெரியாமல் பயணம் செய்தோம்.

பின் அனைவரும் பேருந்தில் ஊருக்கு திரும்ப ஆயத்தமானோம். வரும் வழியில் அடூர் முன்னாள் கேந்திர தொண்டர் சகோதரர் கோபகுமார் அவர்களை சந்தித்து அருகில் உள்ள பாலர்பள்ளிக்கு சென்றோம். அங்குள்ள ஆசிரமக் குழந்தைகளை சந்தித்தோம். 2 குழந்தைகள் மலையாளத்தில் அழகாக கண்ணன் பாட்டு இனிமையாகப் பாடினார்கள். ஆசிரமத்தை நடத்தும் சகோதரி அனைவரும் எங்களை உபசரித்தார்கள். பின் அங்கிருந்து கிளம்பினோம்.

சக்தி பேருந்து அங்கிருந்து புனலூர் செங்கோட்டை, தென்காசி, திருநெல்வேலி வழியாக கோவில்பட்டி, அருப்புக்கோட்டை வந்தடைந்தது. கேந்திர சகோதர சகோதரிகள் ஆங்காங்கு இறங்கினார்கள்.

ஸ்ரீராம் பேருந்து திருவனந்தபுரம் மார்த்தாண்டம் நாகர்கோவில் வழியாக வள்ளியூர் வந்தடைந்தது. கேந்திர சகோதர சகோதரிகள் ஆங்காங்கு தங்கள் இருப்பிடத்தில் இறங்கினார்கள்.

ஆன்மீக சுற்றுலாவானது அனைவருக்கும் தெய்வீக புத்துணர்வையும் பணியில் உற்சாகத்தையும் கொடுக்க பாலசேவிகாக்கள் தங்கள் களப்பணியில் இறங்கினர்.

## கற்பதை ஊக்குவிக்கும் பெற்றோர் கூட்டம்

குமரி மாவட்டம் மங்காவிளை காப்பகப் பெற்றோர் கூட்டத்தில் செல்வி சுபத்திரா பேசும்போது தொடர்ந்து பாலர்பள்ளிக்கு குழந்தைகளை அனுப்புவதன் முக்கியத்துவம், பாலர்பள்ளி முடிந்ததும் ஆரம்பப்பள்ளியில் சேர்ப்பதன் அவசியம் இவற்றை வற்புறுத்தினார்.

பெற்றோர்கள், கேந்திரக் காப்பகத்தினால் குழந்தைகள் நன்கு தேர்ச்சி பெற்றுச் சிறந்து விளங்குவதை ஒப்புக் கொண்டார்கள்.

நிகழ்ச்சியில் இடைஇடையே அல்வாவில் முந்திரிப்பருப்பு போல் குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள் சுவை ஊட்டின.

♦ ♦ ♦ ♦

# கோவில்பட்டியில் ஒளி விழா



கோவில்பட்டியில் 26-ம் ஆண்டாக 1008 திருவிளக்குப் பூஜை, மாதர்மாநாடு (ஏ.வி. மேநிலைப்பள்ளி) சிறப்பு மகளிர் ஊர்வலம், திருவிளக்குபூஜை (செண்பகவல்லி அம்மன் திருக்கோவில்) ஆகியவற்றுடன் சிறப்பாக நடைபெற்றது. டிரஸ்டி திரு திருப்பதி ராஜா, துணைக்காவல்துறை ஆய்வாளர் திரு தர்மராஜா, செயலாளர் திரு அய்யப்பன் ஆகியோர் சிறப்புரையும், பாலர்பள்ளிக் குழந்தைகள் கலைநிகழ்ச்சியும், சிறப்பு அம்சங்களாகும். மாதர் மாநாட்டு சகோதரிகட்கு, சகலகலாவல்லி மாலை, விநாயகர் அகவல் நூல்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

25 கிராமங்களில் இருந்து 1150 தாய்மார்கள் பங்கேற்ற திருவிளக்கு பூஜையை திருமதி சங்கரகோமதி டீன் என்.ஈ.ஈ. கல்லூரி, திருமதி துளசி லட்சுமி அய்யலுசாமி, சகோதரி ஈஸ்வரி சாரதா முதல் விளக்கேற்ற திருமதி மங்கள சுந்தரி பூஜையை நடத்தி வைத்தார்.

**ஒருங்கிணைப்பு திரு ஜி. நாகசாமி - தகவல் செயல்பாடு திரு வெ. பரமகுரு**

## விவேகானந்த கேந்திரம் –

## கன்னியாகுமரி

### கிராம முன்னேற்றத் திட்ட நிர்வாக அலுவலகம்

7பி, சிவந்தாகுளம் முதல் தெரு, தூத்துக்குடி – 628 003.
☎: **0461 - 2376666,** E-mail: rdp@vkendra.org

# ஆசிரியர்களுக்கான கட்டுரைப்போட்டி – 2011

அன்புள்ள ஆசிரியப் பெருமக்களுக்கு,

நமஸ்காரங்கள்.

விவேகானந்த கேந்திர கிராம முன்னேற்றத் திட்டத்தின் பணிகளில் கல்லூரி, பள்ளி ஆசிரியர்கள் பேருற்சாகம் காட்டி வருகின்றனர். பண்பாட்டுப் போட்டிகள், கல்லூரி மாணவர்கள் தேர்வுகள் ஆகியவற்றில் மாணவர்களை ஈடுபடுத்துவதில் ஆசிரியப் பெருமக்களின் பணி போற்றுதற்குரியது. அவர்கள் கேந்திரத்தோடு இன்னும் நெருங்கிய உறவாடச் செய்வதற்காக அவர்களுக்காக சிறப்பு நிகழ்ச்சிகளை கேந்திரம் நடத்த வேண்டும் என்ற ஆவலை அவர்களே வெளியிட்டார்கள். அதன்படி சமுதாயம், விஞ்ஞானம், நீதி நெறிசார்ந்த தெய்வ சிந்தனை அவற்றைப் பற்றிய கட்டுரைத் தலைப்புகளை சுழற்சி முறையில் ஆசிரியர்களுக்குக் கொடுத்து கட்டுரை எழுதச் செய்கிறோம்.

சிறப்பான ஆக்கங்கள் பரிசு பெறுவதோடு கேந்திரப் பத்திரிகையான **விவேகவாணி**யில் தொடராக வந்தும், நூல் வடிவம் பெற்றும் பாராட்டுகளுக்கு உரியதாயிருக்கின்றன. அத்தொடரில் இவ்வாண்டு

## “அறத்தையும், தெய்வ பக்தியையும் வளர்ப்பதில் தமிழ் முனிவர்களின் பங்கு”

என்ற தலைப்பை ஆசிரியர்கள் முன்வைக்கிறோம். சங்ககாலம் முதல் தெய்வத் தமிழை, அறத்தமிழை, போற்றி வளர்த்து சமுதாயத்தைப் பண்படுத்தும் புனிதப் பணியை முனிவர்கள் இடைவிடாமல் செய்து வந்திருக்கின்றனர். அவர்களுடைய பணிகளையும், தாக்கத்தினையும் பற்றிய கட்டுரைகளை வரவேற்கிறோம்.

தங்கள் அனுபவம், அறிவு நூல் அறிவு இவற்றின் அடிப்படையில் தங்கள் பரிந்துரைகள் அமைய வேண்டும். தமிழ் அல்லது ஆங்கிலத்தில் கட்டுரைகள் முப்பது பக்கங்களுக்கு மிகாமல் தெளிவாக எழுதப்பட்டு பள்ளி, கல்லூரி முதல்வரின் அத்தாட்சியுடன் தூத்துக்குடி முகவரிக்கு **30-11-2011** -க்கு முன் அனுப்பப்பட வேண்டும்.

## போட்டிக்கான விதிமுறைகள் பின்வருமாறு

1. தலைப்பு பொதுவாக இருந்தாலும் **பள்ளி ஆசிரியர்களுக்கும், கல்லூரி ஆசிரியர்களுக்கும் தனித்தனியே** போட்டிகள் நடைபெறும்.
2. கட்டுரைகள் தமிழிலோ, ஆங்கிலத்திலோ தெளிவான கையெழுத்தில் வரிக்கு வரி இடம் விடப்பட்டு முழு நீளத்தாளில் எழுதப்பட்டிருக்க வேண்டும்.
3. கட்டுரைகளின் நீளம் **30** பக்கத்திற்கு அதிகமாகக் கூடாது.
4. கட்டுரைப்போட்டிக்கு நுழைவுக் கட்டணம் எதுவும் இல்லை.
5. கட்டுரைகள் விஷயத்தெளிவு, மொழி அழகு இவற்றின் அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு பரிசும், **விவேகானந்த கேந்திரத்தின்** முகாம்களில் கலந்துகொள்ள வாய்ப்பும் அளிக்கப்படும்.
6. கட்டுரைகள் **30-11-2011** -க்குள் **செயலாளர், விவேகானந்த கேந்திரம், கிராம முன்னேற்றத்திட்டம், 7-பி, சிவந்தாகுளம் முதல்தெரு, தூத்துக்குடி - 628 003** என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
7. **தமிழ்நாட்டில் இருக்கும் எல்லாப் பள்ளி மற்றும் கல்லூரி ஆசிரிய, ஆசிரியைகளும்** இப்போட்டியில் கலந்து கொள்ளலாம்.
8. பரிசு விஷயத்தில் நடுவர்களின் தீர்ப்பே முடிவானது.
9. போட்டியில் கலந்து கொள்பவர்கள் **தங்கள் பள்ளி, கல்லூரி தலைமை ஆசிரியர், முதல்வரிடமிருந்து சான்றுக் கடிதம்** பெற்றுக் கட்டுரையுடன் அனுப்ப வேண்டும்.

கேந்திரத்தின் மற்ற எல்லாப் பணிகளையும் போலவே இப்பணியிலும் ஆசிரியப் பெருமக்கள் முழு உற்சாகத்துடன் பங்கேற்று தம்மையும், நாட்டையும் உயர்த்தும் பணியில் ஈடுபட அன்புடன் அழைக்கின்றோம்.

**04-07-2011**
**சுவாமி விவேகானந்தர்**
**சமாதி தினம்**

இவண்
தாய்நாட்டின் பணியில்
விவேகானந்த கேந்திரம்
கிராம முன்னேற்றத் திட்டம்
தூத்துக்குடி - 628 003.

## விஜய அச்சம்பாடு விவேகானந்தருக்கு விழா எடுக்கிறது

நெல்லை தூத்துக்குடி எல்லையில் அமைந்த விஜய அச்சம்பாடு பாலர்பள்ளி 76 பாலர்பள்ளிக் குழந்தைகள் 100 சமய வகுப்புக் குழந்தைகள் 600 பொதுமக்கள் ஆகியோரை இணைத்து விவேகானந்த விழாவினை எழுச்சி பொங்க நடத்திற்று. திரு எஸ். வெள்ளத்துரை, திரு கே. முத்து கிருஷ்ணன், செயலாளர் திரு ஐயப்பன், திருமதி ஜானகி புஷ்பம், திரு கணேச பாண்டியன் ஆகியோரின் பங்கேற்பும் ஆசியும் குழந்தைகட்குக் கிட்டின. பாலர்பள்ளி, சமய வகுப்பு கலை நிகழ்ச்சிகள், பொது மக்களின் கைதட்டலையும் பரிசுகளையும் பெற்றன. நன்றியுரை திரு சி. சண்முக கோமதி விழா ஏற்பாடு. திருமதி ஆர். ரமாதேவி, கே. செல்வராணி. சிறப்பு உதவி அக்கம்பக்கத்து ஆசிரியைகள்

தகவல் பி. உபயசிந்துஜா, என் பிரம்மசக்தி

♦ ♦ ♦ ♦

## பெற்றோரை வழிபட்ட தட்டார்மடம் கிராமம்

தூத்துக்குடி மாவட்டம் தட்டார்மடம் கிராமம் பெற்றோர் பூஜையை அழகுற நடத்தியபோது ஆசிரியர் / அன்பர் அய். வீரசிகாமணியும், திருமதி ஜானகி புஷ்பமும் பெற்றோர் வழிபாட்டின் பெருமையை எடுத்தோதினர். திருமதி அனந்த நாயகி, திரு கணேச பாண்டியன் 33 பெற்றோர்கள் 100 பார்வையாளர்கள் பங்கேற்ற விழாவில் அன்பும் பக்தியும் மீதூறி நின்றன.

♦ ♦ ♦ ♦

### எங்கள் ஊர்க்குழந்தைகட்கு எலெக்ட்ரிக் விசிறி

வெள்ளாளன் விளை (குமரி) காப்பகக் குழந்தைகள் வசதியாக நண்பகல் தூங்குவதற்காக அஸ்மி, ஆஷிகாவின் பெற்றோர் மின்விசிறி போட்டுக் கொடுத்தார்கள்.

ஏற்பாடும் தகவலும் எஸ். அம்பிகா, டி. சுதா.

♦ ♦ ♦ ♦

### கிருஷ்ணன் கூறிய கீதையை ஓதுவோம்

குமரி மாவட்டம் வல்லன்குமாரன்விளையில் டி. பத்மாவதி நடத்திய கீதை ஓதுவோம் விழாவில் 20 தாய்மார்கள் கூடி கீதையின் 11-ம் அத்யாயத்தைப் பாராயணம் செய்தனர். 150 பேர் பார்வையாளர்களாக வந்திருந்து பிரசாதம் பெற்றனர்.

♦ ♦ ♦ ♦




**கோவில்பட்டி மாதர் மாநாட்டில் பாலர்பள்ளி குழந்தைகள் கலை நிகழ்ச்சி**


## சமய வகுப்பு ஆண்டுவிழா

குமரி மாவட்டம் வடக்கு அஞ்சுகுடியிருப்பு சமயவகுப்பு ஆண்டுவிழாவினை செல்வி ஸி. கலையரசி நடத்தினார். ஊர்ப்பெரியவர்கள், திரு அருமைத்தங்கம், திருமதி சகுந்தலா, பொன்மணி, சமய வகுப்பு ஆசிரியர் திரு கண்ணன் ஆகியோர் கலந்து வாழ்த்தி சிறப்பித்தனர். குழந்தைகளின் பல்திறன் கலைநிகழ்ச்சிகளைக் கண்டு மகிழ்ந்த ஊரார் ரூ.2,130 பரிசுகள் வழங்கியது குறிப்பிடத்தக்கது. திரு சந்திர சேகரன் நன்றி கூற, 43 குழந்தைகளும் 150 பார்வையாளர்களும் கலந்து கொண்ட இவ்விழா இனிய விழாவாக நிறைவு பெற்றது.

♦ ♦ ♦ ♦



**பரமக்குடியில் ஆளுமை வளர்ச்சி முகாம்**



**பரமக்குடியில் யோகப்பயிற்சி**



**கோவில்பட்டி மாதர் மாநாட்டில் ஊர்வலம்**



**கோவில்பட்டியில் ஒளி விழா**



# சுவாமி விவேகானந்தரின் கடிதம்



கடமையை ஆற்றுங்கள். மகனே! வரிந்து கட்டிக் கொண்டு பணியாற்று கடவுள் என்னை இதற்காகத்தான் படைத்திருக்கின்றார். பணக்காரர்களை நம்பாதீர்கள். அவர்கள் உயிரோடு இருப்பதைவிட செத்ததுதான் அதிகம். உங்களிடத்தில்தான் விடிவு இருக்கிறது. எளியவர்களிடத்தில், தாழ்ந்தவர்களிடத்தில், நம்பிக்கை உள்ளவர்களிடத்தில்.

இது ஒருநாள் வேலையல்ல; அத்துடன் பாதையும் பயங்கர விஷமயமான முட்களால் நிறைந்ததாகும். ஆனால், பார்த்தனுக்குச் சாரதியாக இருந்தவர் நமக்கும் சாரதியாக இருக்கச் சித்தமாக இருக்கிறார். நமக்கு அது தெரியும். அவருக்காக, அவரிடம் மீளாத நம்பிக்கை பூண்டு, பாரதத்தின்மீது பல சகாப்தங்களாகக் குவித்து, மேடிட்டு மலை போல் இருக்கும் துயரங்களைச் சுட்டுப் பொசுக்குங்கள். அவை எரிந்து சாம்பலாகட்டும்.

பார்த்தசாரதியின் கோயிலுக்கு செல்லுங்கள். கோகுலத்து எளிய ஆயர்களின் தோழனான கண்ணனுக்கு முன்னால் சென்று அந்த உறுதியை எடுத்துக் கொள்ளுங்கள். கண்ணன் ஏழைகளின் தாழ்ந்த இடையர்களின் நண்பனாக இருந்தான். எளியவனான குகனைக் கட்டித்தழுவ அந்தக் கண்ணன் (பார்த்தசாரதி) தயங்கவில்லை. புத்தாவதாரமாக அவன் வந்தபோது சீமான்கள் விடுத்த அழைப்பை விட்டுவிட்டு, ஒரு வேசியின் அழைப்பை ஏற்று அவளைக் காப்பாற்றினான். அந்தப் பார்த்த சாரதியின் சந்நிதியில் சென்று தலை தாழ்த்துங்கள்; மகத்தானதொரு தியாகத்தை அங்கே சங்கற்பம் செய்யுங்கள். யாருக்காக அவர் அவ்வப்பொழுது அவதரிக்கிறாரோ அந்த ஏழைகள், தாழ்ந்தவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள் – இவர்களுக்காக உங்களது வாழ்க்கை முழுவதையும் அர்ப்பணிப்பதாகச் சபதம் செய்யுங்கள். அதன்படி நாளுக்கு நாள் தாழ்வுற்று வரும் முப்பது கோடி மக்களை மீட்பதற்காக வாழ்நாள் முழுவதையும் அளித்துவிடுங்கள்.

இப்பக்கத்திற்கான விளம்பர நிதி உதவி
எஞ்ஜினியர் திரு ஜி. மதிவாணன், சென்னை

# அக்கா என்றால் அக்கா ஆவுடை அக்கா தான்

**1. நுழைவாயில்**

நெல்லை மாவட்டம் செங்கோட்டைப் பகுதியில் அக்கா என்று பேரன்புடன் பாமரமக்களாலும் அழைக்கப்படும் ஆவுடை அக்கா இன்றைக்கு 350-400 ஆண்டுகட்கு முன்பு வாழ்ந்தவர். அத்வைத ஞானத்தை எளிய தமிழ்ப்பாடல்கள் மூலம் கிராமப்புற மக்களிடையேயும் பரப்பிய அனுபவசாலி. அக்காவின் அற்புதக் கதையை படிக்குமுன், அந்த அற்புதத்தை உருவாக்கி நமக்கு அளித்துச் சென்ற ஶ்ரீதர வெங்கடேச ஐயா அவர்கள் வரலாற்றைப் பார்ப்பது, நம்நாட்டில் உண்டாகிய ஆன்மீகப் புரட்சியின் வரலாற்றைப் புரிந்து கொள்ள உதவிபுரியும்.

**2. ஆன்மீக மன்னருக்குதவிய அரசன்**

தஞ்சையில் மராட்டிய அரசினை நிறுவிய ஏகோஜி என்பவரின் மூத்த புதல்வர் ஷஹாஜி என்றும் ஷாஜி என்றும் அழைக்கப்படுபவர் (1684-1712) பிறகு பட்டம் சூடினார். இம்மன்னர் வேதநெறி தழைத்தோங்கும் வண்ணம் கும்பகோணத்தை அடுத்த திருவிசநல்லூரில் ஒரு அந்தணர் தெரு அமைத்து, வேதம் ஓதி அறநெறியில் காலூன்றிய அந்தணர்களை அங்கு குடியேற்றினார். ஶ்ரீதரவெங்கடேச ஐயா என்பாரும் அவ்வாறு குடியேறிய கன்னட நாட்டு அந்தணர் ஆவார். தமிழகத்தின் பஜனை மரபின் லட்சிய குருமார்களான (1) பகவன் நாமபோதேந்திரர் (2) திருவிசநல்லூர் ஐயா (3) மருதாநல்லூர் குருசுவாமிகள் ஆகியோர்களைத் துதிக்கும் வழக்கம் இன்றும் இருக்கிறது.

திருவிசநல்லூர் ஶ்ரீதரவேங்கடேசுவரரின் தந்தை பெயர் லிங்கார்யர் என்றும் அவர் மைசூர் திவானாக இருந்தவர் என்றும் கர்ண பரம்பரைக் கதைகள் தெரிவிக்கின்றன.

திருச்சிராப்பள்ளியில் இவர் தாயுமானவராம் சிவனையும், கிருஷ்ணரையும் ஒன்றாகக் கண்டார். இவரைச் சோதிக்க விரும்பிய மன்னரும் இவர் அடி பணிந்தார்.

இவரே தாராவளீ என்ற துதியைப் பாடி இறந்த குழந்தை ஒன்றை உயிர்ப்பித்தார்.

தஞ்சை மன்னன் ஷஹாஜியாலும் போற்றப்பட்டு ஶ்ரீதரவேங்கடேசுவரர் திருவிசநல்லூர் என்றும் கிராமத்தில் வசித்துவந்தார். சிறிது காலம் திவான் பதவியும் வகித்தார். சிவ, விஷ்ணு நாமங்களின் பெருமையை உணர்த்தும் பல நூல்களை இயற்றினார். அவற்றுள் 15 இப்போதும் ஓதப்பட்டு வருகின்றன.



இறை நாம மகிமையைத் தமிழ்நாட்டில் பரப்புவதில் பெரும்பணி ஆற்றிய பகவன்னாம போதேந்திரரை, ஸ்ரீதரவேங்கடேசர் சந்தித்து நாம மகிமை பற்றி உரையாடுவது வழக்கம்.

ஸ்ரீகிருஷ்ணரின் படத்தில் இருந்த ஸ்ரீகிருஷ்ணரே இவர் அழைப்புக்கு இணங்க, இவர் இல்லத்திற்கு வந்தார்.

ஒரு தடவை மழையின்றிப் பயிர்கள் வாட, இவர் செய்த சிவஸ்துதியால் மழை பெய்து சுபிட்சம் பெருகியது.

அண்டையில் உள்ள திருவிடைமருதூர் மகாலிங்கர் கோவிலில் தினந்தோறும் இவர் இறை வழிபாடு நிகழ்த்துவார். ஒரு நாள் காவிரியில் வெள்ளம் பெருகி, இவர் அங்கு போக முடியாமல் ஆகிவிட்டது. மகாலிங்கப்பெருமானே இவரிடம் வந்து திருநீறு கொடுத்து ஆசி கூறினார். சிவாச்சாரியார் வடிவில் வந்த மகாலிங்கர் மீது இவர் போர்த்திவிட்ட பசுமைநிற சால்வை மறுநாள் கோவிலில் சிவன் திருமேனியில் போர்த்தப்பட்டிருந்தது.

கருணையும் தயையுமே இறைபக்தரின் அடையாளங்கள். ஸ்ரீதரவேங்கடேசுவரரின் மகிமையை உணர்த்தும் பெருநிகழ்ச்சி ஒன்றும் நடந்தது. கார்த்திகை மாத அமாவாசை தன் மூதாதையருக்கு திதி கொடுப்பதற்கு (சிராத்தம்) என்று சமைத்து வைத்திருந்த உணவை அக்கலத்தில் தீண்டப்படாதவராகக் கருதப்பட்ட ஒருவனுக்கு, அளித்து அவனுடைய பசித்துன்பத்தைத் துடைத்தார் ஸ்ரீதரர்.

பொறாமை கொண்ட சில அந்தணர்கள் அவரை ஜாதியை விட்டே விலக்கி வைத்துவிட்டனர். "நீங்கள் போய் கங்கையில் குளித்து விட்டு வந்த பிறகு தான் உங்கள் வீட்டு சிராத்த திதியில் பிறர் கலந்து கொள்ள விடுவோம்" என்று அவர்கள் கூறிவிட்டனர். ஸ்ரீதரர் 'கங்காஷ்டகம்' என்ற துதியை மனம் கசிந்து பாடினார். அவர் வீட்டுக் கிணற்றில் இருந்து கங்கை பொங்கி வந்து வீதியில் பெருக்கெடுத்தது. அவர் பெருமையை அனைவரும் உணர்ந்து கொண்டனர். இன்றும் கார்த்திகை அமாவாசை அன்று திருவிசநல்லூரில் அந்த வீட்டுக் கிணற்றில் பொங்கும் கங்கையில் நீராடிப் பலரும் புண்ணியம் எய்துகின்றனர்.

இத்தகைய தூய்மையும் சிவபக்தியும் உருவெடுத்து சிவபெருமானின் அவதாரமாகவே போற்றப்பட்ட இம்மகான் பற்பல புனிதத்தலங்களை தரிசித்துக் கொண்டு நெல்லைமாவட்டத்தில் உள்ள செங்கோட்டை எனும் ஊரில் அந்தணர் தெருவில் வந்து சேர்ந்தார்.

ஊர்ப்பெரியவர்கள் அவரை வரவேற்றும், அவர் கால்களைக் கழுவி அப்புனித நீரைத் தன் தலையில் தெளித்துக் கொண்டும் புனிதராயினர். ஒரு வீட்டில் மட்டும் வரவேற்பும் இல்லை; பிச்சை அரிசியும் ஸ்ரீதரரின் பிச்சைப் பாத்திரத்தில் இடப்படவில்லை.

ஆனால் ஸ்ரீதரவேங்கடேசரோ அந்த வீட்டு முன்னே நின்று விட்டார். அந்த வீட்டில் வாழ்ந்த 16 வயது விதவையான ஆவுடையம்மாள் என்பவள் அந்தண விதவைகட்கு உள்ள கட்டுப்பாடுகளை மீறி வீதியில் ஓடி வந்து ஸ்ரீதரவேங்கடேசரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, ஞானத்தையே பிச்சையாகப் போடும்படி கெஞ்சினார்.

கருணைக் கடலான ஸ்ரீதரவேங்கடேசுவரர் அச்சிறுமிக்கு தீட்சை கொடுத்தார். மந்திர உபதேசம் செய்தார். ஞானம் கொடுத்தார்.

அவ்வளவுதான். ஆவுடையக்காளின் இதயத்தில் ஞானமும் பக்தியும் யோகமும் வெள்ளம் எனப் பொங்கி எழுந்தன. வீட்டு வாசற்படியையே தாண்டி அறியாத ஆவுடை அக்காள் பிறவிக் கடலையே தாண்டிவிட்டாள. கொச்சையின்றி நான்கு வார்த்தைகள் பேசத்தெரியாத அந்த அபலைப் பெண்ணின் வாக்கிலிருந்து ஞானப்பாடல்கள் திரண்டு எழுந்தன. எளிமையும் ஆழமும் உள்ளத்தைத் தொடும் மூல ஜீவசக்தியும் கொண்ட அப்பாடல்கள் நாட்டுப்புறப் பாடல்களின் பாணியில் அமைந்த அற்புதங்களாகும். உபநிஷதம் கீதை முதலிய ஞான நூல்களின் பெயரையும் கேட்டறியாத பேதையின் வாயில் இருந்து ஞான வெள்ளம் பெருகியது.

ஒரு தடவை ஒரு பாகவத உத்தமரின் (இது ஸ்ரீதரவேங்கடேசரைப் பற்றிய சம்பவமாகவே இருக்கக் கூடும்) எச்சில் பல்துலக்கும் குச்சியை ஆவுடை அக்கா எடுத்துப் பயன்படுத்தியதாகவும், கேட்டதற்கு ''சித்தம் தெளிந்தவர் சேடம் பருகிடில் முக்தியாம்'' என்று பதில் கொடுத்தார் என்றும் கூறுவர்.

ஒரு நாள் அக்க ஆற்றின் நடுவில் அமர்ந்து சிவபூஜை செய்து கொண்டிருக்கும்போது ஆற்றில் வெள்ளம் வர, பிறபக்தர்கள் எழுந்து ஓடிவிட்டனர். ஆறோ ஆவுடை அக்காவை நனைக்காமல் இரண்டாகப் பிரிந்து அவரைச் சுற்றிச் சென்றதாம்.

ஆவுடை அக்காவின் பாடல்கள் பட்டிதொட்டிகளில் பரவின. வீடுகளில் பெண்கள் அவற்றை உணர்ச்சி பொங்கப்பாடினர்.

(கட்டுரை தொடரும்)

# பக்தி இலக்கியம்

**என்.எஸ். பி**

தமிழ்ப் பெருமித முகங்களில் முக்கியமானது பக்தி இலக்கியம். தமிழகம் பாரதபக்தி இயக்கத்தின் தொட்டிலாகக் கருதப்படும். தமிழ் தந்த பக்தி இலக்கியச் செழுமையும், அளவும் பிற மொழி இலக்கியங்களில் அரிதே.

பக்தி இலக்கிய வகைக்கு இலக்கிய அங்கீகாரம் தர மறுக்கும் ஐரோப்பிய இலக்கியப் பார்வையும் உண்டு. தமிழிலோ பக்தி இலக்கியச் செல்வங்களை விழுமிய இலக்கியமாகக் கருதும் போக்கு உளது.

சைவ நாயன்மார்கள் அருளிய பாடல்களின் தொகுப்பு பன்னிருதிருமறைகள். வைணவ ஆழ்வார்கள் அருளிய பாடல்களின் தொகுப்பு நாலாயிரத்திவ்ய பிரபந்தம். இவை தமிழ்பெற்ற இனிய வரப்பிரசாதங்கள்; தமிழ் தந்த இனிய பிரவாகங்கள். இங்கு மூன்று வயதுச் சிறு அகவைப் பெருந்தகையாம் ஞானசம்பந்தர் அருளியவையும் உண்டு; எண்பது வயது அநுபவ முதிர்ச்சியைப் பிழிந்து தரும் நாவுக்கரசர் அருளியவையும் உண்டு. அரசராக விளங்கிய குலசேகரர் தந்தவையும் உண்டு; அமைச்சராகத் திகழ்ந்த சேக்கிழார் தந்தவையும் உண்டு; ஞானசிகரமாகத் திகழ்ந்த நம்மாழ்வார் பாடியவையும் உண்டு; பக்திப் பெருக்காக வாழ்ந்த மாணிக்கவாசகர் பாடியவையும் உண்டு. கண்ணனின் திருமணத்தைக் கனவில் சுவைத்திடும் ஆண்டாள் கவிதைகளும் உண்டு; வெம்மைச் சுடுகாட்டில் பேய்களோடு நடமிடும் சிவநடனம் கண்டு அகங்குளிரும் காரைக்காலம்மை கவிதைகளும் உண்டு. இறைக் காதலை மையங்கொண்டு இவர்களில் பெருகிய இலக்கிய ஞானாமிர்தம் ஈடிணையற்றது.

ஆன்மீக விழிப்புக்கும் அருட்குறிப்புக்கும் தூண்டும் பாவைப் பாட்டுகளும், அகத்துறை தெய்வீகத்தை எழுப்பிடும் வைகறை கீதங்களான திருப்பள்ளியெழுச்சிகளும்; மானிடக்காதலின் செப்புகளில் தெய்வீகக் காதலை ஏந்தும் (Bridal Mysticism) முயற்சிகளும், தடையற்ற அன்பை (Unconditional love) விதவிதமாய்த் தந்து களிக்கும் பிள்ளைத் தமிழ் நுட்பங்களும்; புராணக் கீற்றுகளில் மனம் நெகிழப் பண்ணும் தேன்சுவைப் பிரயோகங்களும், மக்கள் தத்தம் இடப்பெருமிதம் பேணத் தலந்தொறும் சென்று பாடும் முயற்சி நலங்களும் தமிழ்ப் பக்தி இலக்கியங்களுக்கு அழகும் ஆழமும் சேர்க்கக் காண்கின்றோம்; தமிழை உலகமன்றுக்கு ஏந்திச் செல்லக் காண்கின்றோம்.

ஆழ்வார்களும் நாயன்மார்களும் அருளிய அமுதங்களோடு பக்தி இயக்கம் நின்றுவிடவில்லை. புதுமைகளும் ஆழங்களும் தொடர்ந்தன;

எழில்களும் ஏற்றங்களும் வளம் பெருக்கின. பல வண்ணச் சிறகடிப்பு பக்தி உலகில் பரந்தது. சிற்றிலங்களும், தலபுராணங்களும் இதில் உதவின. நக்கீரரின் சங்கத்தமிழ் இறையருள் தேடியது போலவே அருணகிரியின் சந்தத் தமிழும் இறையருள் தேடியது. தாயுமானவரிடம் வேதாந்தச் சித்தாந்தத் தெளிவு மீதூர்ந்தது போலவே பட்டினத்தாரிடம் சித்தர் ஞான வைராக்கியப் புயல்வேகம் மீதூர்ந்தது. பட்டரின் அபிராமி அந்தாதியில் சாக்தமணம் கமழ்ந்தது போலவே ஔவையாரின் விநாயகர் அகவலில் காணாபத்திய யோகம் மணம் கமழ்ந்தது.

உலகின் பக்தி இலக்கிய மாளிகைக்குத் தமிழ் தந்த சீர்வரிசை அற்புதமானது; ஆனந்தம் பெருக்குவது.




Printed by : Shri. Pravin V. Dabholkar at M/s RNR Printers and Publishers, 8, Thandavarayan Street, Triplicane, Chennai - 600 005.

Published by : Shri. Pravin V. Dabholkar for Vivekananda Kendra Prakashan Trust, 5, Singarachari Street, Triplicane, Chennai - 600 005.

Editor : Shri. P. Parameshwaran, President, Vivekananda Kendra, Vivekanandapuram, Kanyakumari - 629 702.